Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1  2023-10-25  4:10 PM  Page 1

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 30, 27 ஒக்டோபர் 2023 இதழ்:- 24

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# நாளை 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை “ஊட்டும் கரங்கள்” நிகழ்வில் கலந்து கொள்ள ரொறன்ரோ வந்துள்ள பாடகர்கள் முகேஷ், சுர்முகி



புலம் பெயர்ந்த தேசங்களில் எங்கள் வாழ்வு வளம் பெறவும் வசதிகள் பெறவும் சொந்த மண்ணில் உயிர்க் கொடை கொடுத்தவர்களின் பிள்ளைகளுக்கான உயிர் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும் 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை 6.00 மணிக்கு நடை பெறும் ஊட்டும் கரங்கள் நிகழ்வில் கலந்து கொள்ள தமிழகத்தின் பிபல பின்னணிப் பாடகர் முகேஷ்,பிரபல பின்னணிப் பாடகி சுர்முகி ஆகியோர் ரொறன்ரோ வந்து சேர்ந்துள்ளனர். விழா குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகும். விபரங்கள் 12,13ம் பக்கம் பார்க்க

தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ் 416 841 9600



## சம்பந்தர் பதவி விலக வேண்டுமென சுமந்திரன் கோரிக்கை?



இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவருடைய முதுமையின் பொருட்டு நடைமுறை அரசியலில் பங்களிப்புச் செய்ய முடியாதிருப்பதனால் அவர் தனது பதவியைத் துறக்க வேண்டுமென அக்கட்சியின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினரு பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாக கோரியுள்ளார் 288 பாராளுமன்ற நாட்களில் வெறுமனே 39 நாட்களில் தான் (4ம் பக்கம் பார்க்க)

## ஈழநாடு மின்னிதழ்
## eelanadu.ca

## பாலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் வரலாற்று துயரங்கள் குறித்து ஐ.நா. செயலாளரின் கருத்துக்கு எதிராக இஸ்ரேல் போர்க்கொடி

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487


THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representatives
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
20 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Simcoe St N & Conlin Rd
Oshawa $279,000
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University
Burnhamthorpe & Confederation
Mississauga $619,990
Bedrooms: 1+1 Washrooms: 1
Indoor pool, gym, party/games rool
Warden Ave / Enterprise Blvd
Markham $749,000
Bedrooms: 1+1 Washrooms: 2
Direct Access to Hwy 7 & 407
Dundas/Hurontario St
Mississauga $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building
Mississauga Rd & Eglinton Ave
Mississauga $1,193,000
Bedrooms: 3 Washrooms: 4
Closer to 403, 401, 407
Lawrence & Morningside
Scarborough $629,900
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area
Green Rd & Brookhill Blvd
Clarington $999,990
Bedrooms: 3 Washrooms: 3
Spent $100,000 on Recently Reno.
Markham Rd & Denison
Markham $629,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.
Simcoe St / Buckingham Ave
Oshawa $1,349,998
Bedrooms: 5 Washrooms: 4
Victorian Style home in Oshawa
Main St & Danforth Ave
Toronto $1,400,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Newly Renovated Spacious Home
Woodbine Ave & Mt Albert Rd
East Gwillimbury $1,500,000
Bedrooms: 3 Washrooms: 2
Approx. 90 Ft Of Frontage
9th Line/14th Ave
Markham $1,759,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly renovated luxury home
Meadowvale / 401
Scarborough $1,999,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated
Fletcherscreek Blvd/Bovaird Dr
Brampton $3,500
Bedrooms: 3 Washrooms: 4
Lots Of Upgrades!
Brock Rd/William Jackson Dr
FOR LEASE
Pickering $2,750
Bedrooms: 2 Washrooms: 3
Open concept main level
Lawrence/Scar. Golf Club
FOR LEASE
Scarborough $3,500
Bedrooms: 3+1 Washrooms: 2
Great neighbourhood
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 3



**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

# மாவீரர்களின் பட்டியலில் தலைவரின் மகன் உட்பட 20 மாவீரர்கள் இணைப்பு

இறுதி கட்ட போரின் போது களமாடி வீரச்சாவினை தழுவிக் கொண்ட மாவீரர்களில், யுத்த நெருக்கடி காரணமாக அடையாளப்படுத்தப்படாமல் விடுபட்ட மாவீரர்களில், உறுதிப்படுத்தப்பட்ட 20 மாவீரர்களின் வீர வணக்க நிகழ்வு நடைபெற்றுள்ளது.

குறித்த நிகழ்வானது 22.ஒக்டோபர் 2023) பிரித்தானியாவில் அமைந்துள்ள உலகத் தமிழர் வரலாற்று மைய வளாகத்தில் உணர்வுர்வமாக இடம் பெற்றுள்ளது.

இந்த ஆண்டு தமிழீழ மாவீரர் பணிமனையால் 20 மாவீரர்கள் உறுதிப்படுத்தப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள். அவ் மாவீரர்களின் விவரங்கள் வருமாறு.



01. மாவீரர்: எழிற்செல்வன் (பொன்னையா செயநாதான்) வவுனியா மாவட்டம். 02. மாவீரர்: இன்மதி (கனகரத்தினம் சனோஜா) முல்லைத்தீவு மாவட்டம் 03. மாவீரர்: கார்மேகம் ( மரியநாயகம் கெனடி) கிளிநொச்சி மாவட்டம். 04.மாவீரர்: அன்புச்செல்வி (தங்கதுரை ஜீவலட்சுமி) முல்லைத்தீவு மாவட்டம். 05. மாவீரர்: இசைக்காவலன் (காந்திராசா ஜெயசுதன்) முல்லைத்தீவு மாவட்டம். 06. மாவீரர்: எழில்வாணி (மோசஸ் மேரிசிந்துஜா) முல்லைத்தீவு மாவட்டம். 07. மாவீரர்: செல்லக்கிளி– கிளியரசன் (கறுப்பையா சசிதரன்) முல்லைத்தீவு மாவட்டம். 08. மாவீரர்: இசையமுதன் (அலைக்சாண்டர் சந்தியோகு) மன்னார் மாவட்டம். 09. மாவீரர்: இளமாறன் (கனகலிங்கம் முகுந்தன்) கிளிநொச்சி மாவட்டம். 10. மாவீரர்: அருளாளினி (பொன்னம்பலம் அருளாளினி) முல்லைத்தீவு மாவட்டம். 11. மாவீரர்: சாள்ஸ் அன்ரனி (பிரபாகரன் சாள்ஸ் அன்ரனி) யாழ் மாவட்டம் 12. மாவீரர் தங்கச்சுடர் (தனபாலசிங்கம் கேசவன்) கிளிநொச்சி மாவட்டம். 13. மாவீரர்: புகழ்மணி (மதியாபரணம் வரோதயன் ) முல்லைத்தீவு மாவட்டம். 14. மாவீரர்: தென்றல் (ஞானலிங்கராசா சுபாஸ்கரன்) முல்லைத்தீவு மாவட்டம்.

15. மாவீரர்: கிளியரசன் (வீரகத்தி தினேஸ்வரன்) முல்லைத்தீவு மாவட்டம். 16. மாவீரர் கார்குயில்.:.ரமேஷ் (சத்தியமூர்த்தி செந்தில்நாதன்) முல்லைத்தீவு மாவட்டம். 17. மாவீரர்: கஜந்தன் (கணேசன் கஜந்தன்) கிளிநொச்சி மாவட்டம். 18. மாவீரர்: கலையமுதன் (ஆறுமுகம் சாந்தகுமார்) கிளிநொச்சி மாவட்டம். 19.மாவீரர்: குமரன் (பாலகுமாரன் ரஞ்சித்குமார்) யாழ் மாவட்டம். 20. மாவீரர் கண்ணன் (நடராசா சித்தி விநாயகன்) யாழ் மாவட்டம்.

இவ் மாவீரர்களின் திருவுருவப்படம் தாங்கிய நிகழ்வு பண்ணிசை அணி வகுப்புடன் ஆரம்பமானது. மாவீரர்களது திருவுருவப்படம் தாங்கிய அணி வகுப்பு பொதுத்தூபியை வந்தடைந்தது. மாவீரர் நினைவுப் பொதுத் தூபியில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றது

# இலங்கையை இராணுவத் தளபாட விநியோகத் தளமாக பயன்படுத்துவதற்கு சீனா முயற்சி - பென்டகன் அறிக்கை



இலங்கையை இராணுவதளபாட விநியோகத்திற்காக பயன்படுத்துவது குறித்து சீனா ஆராய்ந்துள்ளது என பென்டகன் தெரிவித்துள்ளது. சீனா தனது உலகளாவிய இராணுவ தளங்களை விஸ்தரிக்க முயற்கின்றது என தெரிவித்துள்ள பென்டகன் சீனா தனது இராணுவதளபாட விநியோகத்திற்காக 18 நாடுகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது..

இராணுவ நடவடிக்கைகளிற்கான தேவை எழும்போது சீனா இராணுவம் பயன்படுத்தக் கூடிய தளங்களை உருவாக்குவது குறித்தே சீனா கவனம் செலுத்துகின்றது. சீனா இராணுவ தளபாட விநியோகத்திற்கான தளங்களை ஏற்படுத்துவது குறித்து ஆராயும் நாடுகளில் நான்கு நாடுகள் இந்தியாவின் நெருங்கிய அயல்நாடுகளாகும் பங்களாதேஸ் இலங்கை மியன்மார் பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளே இவை என பென்டகன் தெரிவித்துள்ளது.

ஏனைய மூன்றுநாடுகளும் தென்கிழக்காசிய நாடுகள் தாய்லாந்து சிங்கப்பூர் இந்தோனேசியா என 2023 இல் சீனாவில் இராணுவம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற அமெரிக்காவின் காங்கிரஸிற்கான அமெரிக்காவின் பாதுகாப்பு வருடாந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

தொலைதூரங்களில் தனது இராணுவ வலிமையை வெளிப்படுத்துவதற்கு உதவும் விதத்தில் சீனா தனது வெளிநாட்டு உட்கட்டமைப்பு மற்றும் விநியோக வசதிகளை விஸ்தரிக்க முயல்கின்றது என தெரிவித்துள்ள பென்டகன் சீனாவின் இந்த நடவடிக்கைகள் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளை குழப்பலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

## இஸ்ரேல் முற்றுகை:- ஒபாமா எச்சரிக்கை

காசா மீதான இஸ்ரேலின் முற்றுகையால் எதிர்விளைவுகள் ஏற்படலாம் என அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார். ஒக்டோர்பர் 7ம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலின் பின்னர் இஸ்ரேல் காசாவை முற்றுகையிட்டடுள்ளமையும் விமானக்குண்டுவீச்சுகளும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தலாம் என தெரிவித்துள்ள பராக் ஒபாமா இது இறுதியில் மத்தியகிழக்கில் அமைதி ஸ்திரதன்மையை ஏற்படுத்துவதற்கான நீண்டகால முயற்சிகளிற்கு பாதிப்பு ஏற்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் இஸ்ரேலிற்கு ஆதரவளித்தால் கூட இஸ்ரேல் ஹமாசிற்கு எதிரான யுத்தத்தை எவ்வாறு முன்னெடுக்கின்றது என்பது குறித்து நாங்கள் தெளிவாகயிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# யாழ்ப்பாணத்தில் வர்த்தகத்தை ஆரம்பித்துள்ள சீனா

கடந்த சில காலமாக சீனாவின் செயற்பாடுகள் தெற்கை நோக்கியதாக இருந்த நிலையில் தற்போது வடக்கிலும் தனது செயற்பாட்டை மெல்ல ஆரம்பித்துள்ளது. இந்த மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் சைனோபெக் நிறுவனம் பெற்றோல் விநியோகத்தை ஆரம்பித்த நிலையில் 24 ஒக் 2023 செவ்வாய்கிழமை மானிப்பாய் மெமோறியல் வீதியில் சைனோ பெக் ஒயில் வகைகளை அறிமுகம் செய்து விநியோக முகவரை அறிமுகப்படுத்தியுள்ளது.



குறிப்பாக சைனோபெக் ஒயில் நிறுவனத்தின் இலங்கையின் ஏக விநியோகஸ்தரான இன்டர்நஷனல் லுப்ரிக்கட் பிறைவட் லிமிட்டட் நிறுவனமானது யாழ்ப்பாணத்திற்கான தனது யாழ். விநியோகஸ்தராக கோல்ட் மவுன்ட் பிறதர்ஸ் பிறைவட் லிமிட்டட் என்னும் நிறுவனத்தினை மானிப்பாயில் ஆரம்பித்துள்ளது.

இந்நிகழ்வில் பங்குதாரர்களான பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜயசாந்த தொட்டஹேவகே, தேசிய விற்பனை முகாமையாளராக துசிதகுமார, விற்பனை முகாமையாளர் எம்.குகன் விருந்தினர்களாக கலந்து கொண்டதுடன் சைனோபெக் எரிபொருள் விற்பனை முகாமையாளர்கள் வாகன திருத்துநர்கள் வாகன உதிரிப்பாக விற்பனையாளர்கள் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சம்பந்தர் பதவி விலக வேண்டுமென சுமந்திரன் கோரிக்கை?

இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவருடைய முதுமையின் பொருட்டு நடைமுறை அரசியலில் பங்களிப்புச் செய்ய முடியாதிருப்பதனால் அவர் தனது பதவியைத் துறக்க வேண்டுமென அக்கட்சியின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாக கோரியுள்ளார்.

288 பாராளுமன்ற நாட்களில் வெறுமனே 39 நாட்களில் தான் பாராளுமன்றத்துக்கு இரா.சம்பந்தன் வருகை தந்திருக்கின்றார் என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பெறப்பட்டுள்ள தகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அவருடைய வருகை வீதம் 13.6 சதவீதமாக உள்ளது. அவ்வாறான நிலையில் அவருக்கு பாராளுமன்ற சம்பளம், எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகள் என மொத்தமாக 4 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இது மக்களின் வரிப்பணமாக உள்ளது. ஊழல் தடுப்ப் பற்றி பேசப்படுகின்ற இக் காலகட்டத்தில் இதுவொரு மாற்று வடிவமாக அமைகின்றதா? என்று சுமந்திரன் தனியார் தொலைக்காட்சியொன்றில் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்ற வேளையில், வினவப்பட்டது. அதற்குப் பதிலளித்த சுமந்திரன் – சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக பாராளுமன்றத்துக்கு வருகை தர முடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன். அந்தவகையில் நான் ஒரு விடயத்தினை இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்கமாக தெரிவிக்க விரும்புகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்னதாக அவரால் பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்க முடியாத நிலைமைகள் ஏற்பட ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் நான் சம்பந்தனிடத்திலேயே நேரடியாக பதவி விலகுமாறு கோரினேன். அதன்போது சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார். அத்துடன், அவர் அதற்கான காரணத்தினையும் தெளிவு படுத்தினார்.

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது திருகோணமலை மக்கள் தன்னை அந்த மாவட்டத்தின் முதலாம் நபராக தெரிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் எனது உடல் நிலைமைகளை அறிந்தே தெரிவு செய்திருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். அதனை சம்பந்தன் மீண்டும் நினைவு படுத்தினார்.

எனினும், திருகோணமலை மக்களை பிரதிநிதித்துவம் செய்து செயற்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பிறிதொரு பிரதிநிதியை நாங்கள் நியமித்தாலும் அவர் முழுமையான செயற்பாடுகளை ஆற்றுவரா என்பது பற்றிய பல கரிசனைகள் உள்ளன.



எவ்வாறாயினும், சம்பந்தனின் முதுமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியான விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, அவர் பதவியைத் துறக்க வேண்டும் என்பது தான் எனது தனிப்பட்ட கருத்தாகவுள்ளது. அடுத்துவரும் காலத்தில் அது தொடர்பான சில நடவடிக்கைகளை எடுப்போம் என்றார்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 5



# உலகில் சிறந்த விஞ்ஞானிகள் தர வரிசையில் இடம் பிடித்த 2 ஈழத்தமிழ் விஞ்ஞானிகள்





அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகமும் எல்செவியர் நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ள உலகின் சிறந்த முதல் 2 வீத விஞ்ஞானிகளின் தர வரிசையில் முப்பத்தெட்டு விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் இடம் பெற்றுள்ளனர்.

இந்தப் பட்டியலில் இலங்கையிலிருந்து உள்ளடக்கப் பட்டோரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களான பேராசிரியர் நவரட்ணராஜா சதிபரன், கலாநிதி ரி.மதனரஞ்சன் ஆகிய இருவரும் இடம் பெற்றுள்ளனர். பணி நாள் மற்றும் வருடாந்த அடிப்படையில் விஞ்ஞானிகளைப் பல்வேறு காரணிகளைக் கொண்டு தர வரிசைப்படுத்தி இந்தப் பட்டியல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

22 அறிவியல் துறைகள் மற்றும் 176 துணைத் துறைகளில் இருந்து விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டியலில் இணைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் யூத ஜெப ஆலயத் தலைவர் சமந்தா வோல் பட்டப்பகலில் குத்திக் கொலை!

அமெரிக்காவின் டெட்ராய்ட் நகரில் யூத ஜெப ஆலயத் தலைவர் ஒருவர், அவரது குடியிருப்புக்கு வெளியே கத்தியால் தாக்கி கொல்லப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சனிக்கிழமை பகல் குறித்த சம்பவம் நடந்துள்ளதாகவே தகவல் வெளியாகியுள்ளது. 40 வயதான சமந்தா வோல் என்பவரே கொடூரமாக தாக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

2022 முதல் டெட்ராய்ட் நகரில் யூத ஜெப ஆலயத் தலைவராக செயல்பட்டு வருகிறார். மட்டுமின்றி அரசியல் ஈடுபாடு கொண்டவர் என்பதுடன் காங்கிரஸ் பெண்மணி எலிசா ஸ்லாட்கின் உட்பட பல ஜனநாயகக் கட்சி அரசியல்வாதிகளுடன் இணைந்து பணியாற்றியும் உள்ளார்.

பல கத்திக் குத்து காயங்களுடன் காணப்பட்ட அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் எனவும் தெரிய வந்துள்ளது. பொலிசார் தொடர்ந்து விசாரித்து வருவதாகவும், இந்தக் கொலைக்கும் மத்திய




கிழக்கின் அமைதியின்மைக்கும் எந்தத் தொடர்பும் உள்ளதா என்பது குறித்தும் விசாரிக்கப்படும் என பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

# மத்தியகிழக்கில் அமெரிக்கப் படையினர் தாக்கப்பட்டால் தகுந்த பதிலடி - அமெரிக்கா



ஹமாஸ் இஸ்ரேல் மோதலின் போது அமெரிக்க படையினர் தாக்கப்பட்டால் அமெரிக்கா திருப்பி தாக்குவதற்கு தயார் என அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார். மத்திய கிழக்கில் போர் மேலும் பரவும் ஆபத்து அதிகரித்துள்ள நிலையிலேயே அன்டனி பிளிங்கென் இதனை தெரிவித்துள்ளார்.

என்பிசியின் மீட் த பிரசில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் இதனை தெரிவித்துள்ள பிளிங்கென் ஈரான் ஆதரவு சக்திகளால் மத்திய கிழக்கில் போர் மேலும் தீவிரமடையலாம் என எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த மோதலின் போது அமெரிக்க படையினர் இலக்கு வைக்கப்பட்டால் பதில் நடவடிக்கையில் ஈடுபட பைடன் நிர்வாகம் தயாராகவுள்ளது எனவும் பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

ஹமாசுடான யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் காசாவை ஆட்சி செய்வதற்கு இஸ்ரேல் விரும்பவில்லை என தெரிவித்துள்ள பிளிங்கென் ஆனால் யுத்தத்தின் பின்னர் ஒக்டோபர் ஏழாம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட நிலை காணப்படும் என எதிர்பார்க்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

காசா பள்ளத்தாக்கிலிருந்து ஹமாசின் தாக்குதலை எப்போதும் எதிர்கொள்ளும் நிலையில் இஸ்ரேல் இருக்கவேண்டும் என நீங்கள் எதிர்பார்க்க முடியாது. எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஹமாஸ் மீண்டும் இதே நடவடிக்கைகளில் ஈடுபடாமலிருப்பதை உறுதி செய்யவேண்டும் அதே வேளை காசாவை மீண்டும் இஸ்ரேல் ஆட்சி செய்யாத நிலை வேண்டும் அவர்கள் அதனை விரும்பவில்லை எனவும் பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

# இவர்களுக்காக.... நாளை வாருங்கள்!





என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே!

திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 13 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 12 ஆண்டுகளாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வருகின்ற மகத்தான ஆதரவினால் இன்று 436 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர்களது இடர்களைக் களையவும் கல்வியை மேம்படுத்தவும் எதிர்வரும் 28 ஒக் 2023 சனிக்கிழமை நடைபெற்றவுள்ள ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன் (விபரங்கள் 12ம் 13ம் பக்கம் பார்க்க)

வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனி மனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள்.

நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். நாம் வாழும் கனடிய மண்ணிலும் அனைத்துமே விலை யேற்றம் கண்டுள்ளமையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விழாவில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்களால் முடிந்தளவு பங்களிப்பை எம்முடன் தொடர்பு கொண்டு வழங்குமாறும் உங்கள் பெயர், விபரங்கள் ஈழநாடு பத்திரிகையிலும் முகநூலிலும் தவறாது வெளிவரும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

எம் தேசத்தின் எதிர்காலச் சந்ததி எம் மண்ணில் நிம்மதியாக சிறப்பாக வாழ வழி சமைப்போம்! வாரீர்!

**விழா நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத நிலையில் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இரண்டு கருணையுள்ளங்களான வாகீசன் குடும்பம், தயாபரன் குடும்பம் இணைந்து 100.00 டொலர்களும்**

**திருமதி சரோஜினிதேவி கணேசலிங்கம் 100.00 டொலர்களும் வழங்கியுள்ளனர். (தொடரும்)**

தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 6



# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக தமிழர் ஒருவரை நிறுத்த முடிவு - சுரேஷ் அறிவிப்பு!



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசியல்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கொள்கையளவில் இணக்கம் கண்டுள்ள நிலையில், அடுத்துவரும் நாட்களில் மாவை.சேனாதிராஜா தலைமையிலான இலங்கைத் தமிழரசுக்கட்சி மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றுடன் பேச்சுக்களை நடத்துவதற்க எதிர் பார்த்துள்ளதாக அக்கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வீரகேசரியிடம் மேலும் தெரிவிக்கையில், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலத்தில் நடைபெற்றுள்ள ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக தமிழ்க் கட்சிகள் முறையே சரத்பொன்சேகா, மைத்திரிபால சிறிசேனா, சஜித் பிரேமதாச ஆகியோருக்கு ஆதரவு தெரிவித்து செயற்பட்டிருந்தன.

இதில் இரண்டு வேட்பாளர்கள் வெற்றியடைந்திருக்கவில்லை. மைத்திரிபால சிறிசேன மட்டுமே வெற்றி பெற்றிருந்தார். ஆனால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாற தொடர்ச்சியாக தென்னிலங்கை தலைவர்களில் ஒருவரைத் தெரிவு செய்வதும், பின்னர் அவர்கள் ஏமாற்றுவதுமான நிலைமைகள் வரலாறு நெடுகிலும் தொடர்கதையாக உள்ளது.

தற்போதைய சூழலில் நாடு பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்திருக்கின்ற போதிலும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டு வருகின்றன. அதேநேரம், திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவை நீண்டு கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரங்களைப் பகிரப்போவதாகவும், 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்கப் போவதாகவும் அறிவித்து சில கலந்துரையாடல்களைச் செய்திருந்தார். இருப்பினும் அந்தக் கலந்துரையாடல்கள் திருப்திகரமானதாக இருக்கவில்லை என்பதோடு தேரர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்ட நிலைக்குச் சென்றிருக்கின்றது.

ஆகவே, அடுத்த ஆண்டு நவம்பர் மாதமளவில் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாக உள்ளன. அந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க உள்ளிட்டவர்களும் இன்னும் சிலரும் களமிறங்கவுள்ளதாக தற்போதைக்கு கூறப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி நபர்கள் யாரும் தமிழர்களின் விடயத்தில் பகிரங்கமான உடன்பாடுகளை எட்டுவதற்கு தயராகவில்லை. ஆகக் குறைந்தது அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தினைக் கூட முழுமையாக அமுலாக்குவதற்கு தயார் என்ற அறிவிப்பைச்செய்வதற்கு தயாரில்லாதவர்களாக உள்ளனர்.

ஆகவே தான், தமிழ் கட்சிகளுக்கு இடையில் உடன்பாடுகளை எட்டு, தமிழ் மக்களின் வாக்குகள் அனைத்தும் எம்மால் நிறுத்தப்படும் பொதுவேட்பாளர் ஒருவருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற பிரசாரத்தினை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

இந்த முயற்சியால் எம்மால் நிறுத்தப்படும் வேட்பாளர் ஜனாதிபதி அரசியாசனத்தில் அமரப் போகின்றார் என்பது அர்த்தமல்ல. மாறாக, தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளமையால் அவர்கள் தென்னிலங்கை தலைவர்களை நம்பி வாக்களிப்பதற்கு தயார் இல்லை என்ற செய்தியினை வெளிப்படுத்துவதே இலக்காக உள்ளது.

மேலும், தென்னிலங்கையில் தற்போதுள்ள கருத்துக் கணிப்புக்களின் பிரகாரம், ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் களமிறங்கினால் எந்தவொருவரும் முதலாம் இரண்டாம் சுற்றில் கூட 51சதவீதமானத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே உள்ளன. இதனால் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானிக்கும் நிலையை அடைவதற்கான சாத்தியங்களும் உள்ளன. ஆகவே தான் பொது வேட்பாளர் ஒருவரை தமிழ் கட்சிகள் இணைந்து நிறுத்துவதென தீர்மானித்துள்ளோம்.

இதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக்கட்சிகள் இடையே கொள்கையளவிலான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அதே நேரம், இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றுடன் உத்தியோகபூர்வமான பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன என்றார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

**Instructor: S. Elancheliyan,** B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

**Tel: 416-524-0424**

Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 7



# கனடாவுக்கு அமெரிக்கா, பிரிட்டன் ஆதரவு! இந்தியாவின் நடவடிக்கையை எதிர்ப்பது ஏன்?




கனடா மண்ணில் சீக்கிய பிரிவினைவாதத் தலைவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் ஏற்பட்ட சுசப்பைத் தொடர்ந்து 41 கனடா தூதரக அதிகாரிகள் இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளனர். இந்தியா இரண்டு வாரங்களுக்கு முன்பு கனடாவை அதன் தூதரக ஊழியர்களை குறைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. அவர்கள் தங்கியிருந்தால் அவர்களுக்கான ராஜாங்க சட்ட விலக்குகளை நீக்கிவிடப் போவதாகவும் இந்தியா கூறியிருந்தது. கனடா இதை 'சர்வதேச சட்ட மீறல்' என்று கூறியது

ஜீன் 18 ஆம் தேதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதற்குப் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து உறவுகளில் பதற்றம் ஏற்பட்டது. பல வாரங்களாக இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே நிலவி வரும் பதற்றத்தில் இப்போது அமெரிக்காவும் பிரிட்டனும் நுழைந்துள்ளன.

இந்தியாவில் கனடாவின் தூதரக அலுவலர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தக் கூடாது என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கூறியுள்ளன.

### கொந்தளித்த ஜஸ்டின் ட்ரூடோ

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறுகையில், இந்த வாரம் இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்திற்கு முரணானது. இந்தியாவில் உள்ள 41 கனேடிய தூதர்களின் ராஜாங்க சட்ட விலக்குகளை தன்னிச்சையாக ரத்து செய்ய இந்திய அரசு முடிவு செய்தது.

இது வியன்னா ஒப்பந்தத்தை மீறும் செயல். உலகில் உள்ள அனைத்து நாடுகளும் கவலைப்பட வேண்டிய விஷயம் இது. கனேடிய மண்ணில் கனேடிய குடிமகன் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் விஷயத்தில் இந்தியா சர்வதேச சட்டத்தைக் கடுமையாக மீறியதாக நாங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளை இந்தச் செயல்களின் மூலம் இந்தியா ஒதுக்கி வைக்கிறது.

இந்திய அரசு, இந்தியாவிலும், கனடாவிலும் உள்ள லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை நம்ப முடியாத அளவிற்கு இது கடினமாக்குகிறது.'' எனக் கூறியுள்ளார்.

### அமெரிக்கா என்ன சொன்னது?

வெள்ளிக்கிழமையன்று, அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர், 'இந்திய அரசு இந்தியாவில் கனடா நாட்டு தூதரக அலுவலர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு கனடாவைக் கேட்டுக் கொண்டது. அந்த வேண்டுகோளின் பேரில் கனடா தூதர்களை திரும்ப அழைத்துள்ளது. கனடா தூதர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறுவது குறித்து நாங்கள் கவலைப்படுகிறோம்.' என்றார். இந்தியா மீது கனடா சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து தீவிரம் காட்டுவதாக அமெரிக்கா ஏற்கெனவே தெரிவித்திருந்தது.

வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் 'பரஸ்பர கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க தூதரக உறவு பலமாக இருப்பது மிகவும் முக்கியம். கனடா தனது தூதர்கள் இந்தியாவில் இருப்பதைக் குறைக்க வேண்டும் என்ற பார்வை நீடிக்கக் கூடாது என்று நாங்கள் இந்திய அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளோம்.' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் கனடாவின் விசாரணைக்கு இந்தியாவும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கை கோருகிறது.

இந்தியா 1961 ஆம் ஆண்டு தூதரக உறவுகளுக்கான வியன்னா உடன்படிக்கைக்கு உட்பட்டு, கனடா தூதரகப் பணிகளின் உறுப்பினர்களுக்குத் தகுதியான வசதிகள் மற்றும் தூதரக விலக்குகளை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.' என்று அதில் கூறப்பட்டுள்ளது. கனடாவின் விசாரணையில் இந்தியா ஒத்துழைக்க வேண்டும் என ஏற்கெனவே அமெரிக்காவும், பிரிட்டனும் கேட்டுக்கொண்டுள்ளன.

இது தொடர்பாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சகமும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பிரிட்டன் அமைச்சகத்தின் அறிக்கை அமெரிக்க அரசின் அறிக்கையுடன் ஓரளவு ஒத்துப்போகிறது. பரஸ்பர கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க, இரு நாடுகளின் தலைநகரங்களில் தூதர்கள் இருப்பது அவசியம் என்றும், இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை தொடர வேண்டும் என்றும் அமைச்சகம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

பல கனடா நாட்டு தூதர்கள் இந்தியாவை விட்டு வெளியேற காரணமான இந்திய அரசின் முடிவில் நாங்கள் உடன்படவில்லை. 1961 வியன்னா தூதரக உறவுகள் உடன்படிக்கையின் கீழ் இரு தரப்பினரும் தங்கள் கடமைகளுக்குக் கட்டுப்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். 'ஒருதலைப்பட்சமாக தூதரக அலுவலர்களை நீக்கம் செய்வது, அவர்களைப் பாதுகாப்பது மற்றும் அவர்களுக்கான தூதரக அதிகாரம் மற்றும் சலுகைகளை மறுப்பது வியன்னா மாநாட்டின் கொள்கைகள் அல்லது அதன் பயனுள்ள செயல்பாடுகளுக்கு முரணானது.' ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கின் பாரபட்சமற்ற விசாரணையில் கனடாவுடன் தொடர்பில் இருக்க இந்தியாவை தொடர்ந்து ஊக்குவிப்போம் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### கனடாவுக்கு விசா பெறுவதில் சிக்கல்?

இதற்கிடையே கனடாவின் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி, இந்தியாவில் உள்ள பல கனடா தூதரக அதிகாரிகளும் அவர்களைச் சார்ந்தவர்களும் நாட்டை விட்டு வெளியேறி விட்டனர் என்பதை உறுதிப்படுத்தினார். அக்டோபர் 20 ஆம் தேதிக்குள் '21 தூதரக அதிகாரிகளைத் தவிர மற்ற அனைவருக்கும்' ராஜாங்க சட்ட விலக்கு 'தன்னிச்சையாக அகற்றப்படும்' என்று இந்தியா கூறியதாக அவர் தெரிவித்தார்.

மீதமுள்ள 21 தூதரக அதிகாரிகள் இன்னும் இந்தியாவில் இருப்பதாகவும், இருப்பினும் பணியாளர்கள் பற்றாக்குறையால் கனடா தனது சேவைகளை நாட்டில் குறைக்க வேண்டியிருக்கும் என்று ஜோலி கூறினார். பெங்களூர், மும்பை, சண்டிகரில் மக்கள் நேரில் வந்து பெறும் சேவைகளுக்கு தடையாக இருக்கும் என்று ஜோலி கூறினார். இந்தச் சேவைகள் எப்போது மீண்டும் தொடங்கும் என்பது குறித்த காலக்கெடு எதுவும் இல்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### மாணவர்களுக்கு என்ன பாதிப்பு?

டெல்லியில் உள்ள கனடா தூதரகத்தில் சேவைகள் தொடர்ந்து கிடைக்கும் எனவும், மூன்றாம் தரப்பு மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகளும் தொடரும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். எவ்வாறாயினும், பணியாளர்களின் குறைப்பால் குடியேற்ற விண்ணப்பங்களுக்கான செயலாக்கத்தில் தாமதம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என கனடா குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் கூறினார். முக்கியமாக கனடாவில் படிக்க விரும்பும் மாணவர்கள் உட்பட இந்திய குடிமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

2022 கணக்குப்படி கனடாவில் தற்காலிக, நிரந்தர குடியேற்றத்துக்கான விண்ணப்பதாரர்களில் இந்தியர்களே அதிகம்.

கனடா தலைநகர் ஒட்டாவாவில் உள்ளதை விட டெல்லியில் அதிகமான தூதரக அதிகாரிகள் இருப்பதாக இந்தியா கூறுகிறது. இரு நாடுகளுக்கும் இடையே மோதல் வெடித்த நிலையில், இந்த எண்ணிக்கை சமமாக (22ம் பக்கம் பார்க்க)

# எதிர்ப்பு அரசியலின் இலக்கு?

தமிழ்த் தேசிய கட்சிகள் அரசாங்கத்தின் நீதியற்ற அணுகுமுறையை கண்டித்து போராடுகின்றனர். இந்தப் போராட்டத்தின் வடிவமாக ஹர்த்தாலை பயன்படுத்துகின்றனர். இது தவறானதல்ல ஆனால் இதனுடன் விடயங்கள் முடிந்து விடக்கூடாது.

தமிழ் மக்களின் நியாயங்களுக்கான தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒன்றுபட்ட செயல்பாடுகளுடன் ஈழநாடும் பயணிக்கும். ஆனால், அந்தச் செயல்பாடுகள் வெறும் பெயரளவு நடவடிக்கையாக சுருங்கிப் போகக்கூடாது என்பதையே 'ஈழநாடு' வலியுறுத்த விரும்புகின்றது.

ஏனெனில் யுத்தத்துக்கு பின்னரான கடந்த பதினான்கு வருடங்களில் ஏராளமான எதிர்ப்பு அரசியல் நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்கின்றன. மக்கள் அனைத்து செயல்பாடுகளுக்கும் முடிந்தவரையில் தங்களின் தார்மீக ஆதரவை வழங்கியிருக்கின்றனர்.

ஆனால் எதிர்ப்பு அரசியலுக்கான ஆதரவை கோரிய கட்சிகளோ அரசியல் சவால்களை எதிர்கொள்வதற்கான ஒரு பொறிமுறையை இன்றுவரையில் கண்டடையவில்லை.

எதிர்ப்புகள் காண்பிக்கப்பட வேண்டிய தருணங்களில் காண்பிக்கத் தான் வேண்டும். ஆனால், இவ்வாறான எதிர்ப்புகளால் மட்டுமே ஒரு சமூகம் முன்னோக்கி நகர முடியாது.

யுத்தத்துக்கு பின்னரான அரசியல் சவால்களை எதிர் கொள்வதற்கான ஒரு வலுவான அரசியல் பொறிமுறையொன்றை தமிழ்த் தேசிய கட்சிகள் கண்டடையவில்லை. அவ்வாறானதொரு பொறிமுறைக்கு முதலில் தமிழ்த் தேசிய கட்சிகள் பொது வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் இணைய வேண்டும்.

தேர்தல் நலன்களை இரண்டாமிடத்துக்கு தள்ளி மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்திக்க வேண்டும். இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதில் உறுதியான நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்.

அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்பதை ஒரு கொள்கை நிலைப்பாடாகக் கொள்ள வேண்டும். அதில், தடுமாற்றங்களை வெளிப்படுத்தக்கூடாது.

வெறுமனே இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதி விட்டு, கடிதத்துக்கு பதில் வருமென்று காத்திருப்பதில் பயனில்லை. இந்தியாவை நோக்கி செல்ல வேண்டும். புதுடில்லி தமிழ்த் தேசிய கட்சிகளை நம்பக்கூடியளவுக்கு செயலாற்ற வேண்டும்.

ஏனெனில், தமிழ் கட்சிகளை நம்பிச் செயல்படக்கூடியளவுக்கு புதுடில்லி இருப்பதாக தெரியவில்லை. இதற்கு தமிழ் கட்சிகளின் அணுகுமுறையே பிரதான காரணம்.

இந்தியா அதன் நிலைப்பாட்டை தெளிவாகச் சொன்ன பின்னரும்கூட, இந்திய பிரதமர் சமஷ்டியை பெற்று தரவேண்டுமென்று கடிதம் அனுப்புவதானது இந்தியாவுக்கு எதிரான செயல்பாடாகும். சமஷ்டியை ஓர் இறுதி எதிர்பார்ப்பாக முன்வைப்பத்தில் தவறில்லை.

ஆனால், அதனை இந்தியா பெற்றுத் தர வேண்டுமென்று கோருவதானது இந்தியாவால் வலியுறுத்தப்படும் விடயத்தை பலவீனப்படுத்துவதற்கே பயன்படும். அதேவேளை, இந்தியாவின் வேண்டுகோளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாட்டிலிருந்து இலங்கை அரசாங்கமும் இலகுவாக ஒதுங்கிக் கொள்ள முடியும்.

ஏனெனில், தமிழ் கட்சிகளின் தலைமை விரும்பாத ஒன்றை இந்தியா எதற்காக வலியுறுத்த வேண்டுமென்னும் வாதமொன்றை சிங்கள அரசியல் சமூகம் முன்வைப்பது இலகுவாகும். அரசாங்கத்தின் அத்துமீறல்களை கண்டித்து எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கும் தமிழ்த் தேசிய கட்சிகள் அந்த எதிர்ப்பு அரசியலின் அறுவடை தொடர்பிலும் தெளிவான பார்வையை கொண்டிருக்க வேண்டும். இன்றுவரையில் அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்து மாறு கோரி ஒரு கடையடைப்புக்கூட நடந்ததில்லை.

ஏன்? ஏன் அதனை தமிழ்த் தேசிய கட்சிகளால் செய்ய முடியவில்லை ஆனால் 13ஆவது திருத்தம் தேவையில்லை. அதனை இல்லாதொழிக்க வேண்டுமென்னும் அடிப்படையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடத்தியிருந்தது. அதனை எதிர்த்துக் கூட ஏனைய தமிழ் கட்சிகள் எதிர் வினையாற்றவில்லை.

(22ம் பக்கம் பார்க்க)

# யாழ்.நகரில் இசையமைப்பாளர் சந்தோஷ்நாராயணனின் நிகழ்ச்சியில் இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களுக்கு மௌன அஞ்சலி

யாழ்ப்பாணம், முற்றவெளி மைதானத்தில் 21 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை நடைபெற்ற தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனின் 'யாழ் கானம்' இசை நிகழ்ச்சியின் முதல் அம்சமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் நடத்தப்பட்ட படுகொலையை மறைக்கவே அதே நாளில் இசை நிகழ்ச்சி நடாத்தப்படுவதாக சர்ச்சைகள் எழுந்த நிலையில், இசை நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின்போது குறிப்பிடப்பட்ட விடயமாவது கலையும் கலாசாரமும் சிறந்து ஓங்கும் இந்த யாழ் மண்ணில் 'யாழ் கானம்' என்ற இசை நிகழ்ச்சியை அளிப்பதில் சந்தோஷ் நாராயணனும் அவர் குழுவினரும் பெருமகிழ்ச்சி கொள்கின்றனர். இம்மண்ணும் இம்மண்ணில் வாழும் மக்களும் கண்ட துயர்கள் அநேகம். ஒரு வருடத்தின் 365 நாட்களில் எந்த திகதியையும் எடுத்து வரலாற்று ஏடுகளைப் பின்னோக்கி புரட்டினாலும் அந்த திகதியில் ஒரு கொடூர சம்பவம், ஒரு துயர்மிகு சம்பவம் நிகழ்ந்திருக்கும்.

ஏன், இன்றும் இத்திகதியில் சரியாக 36 வருடங்களுக்கு முன் யாழ். போதனா வைத்தியசாலையில் நடந்த கொடூரமான நிகழ்வை நாம் துயருடன் நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறோம். கலை நிகழ்ச்சிகள் உள்ளத் துயர்களை நீக்கும் மருந்தாவன. அதனால் சந்தோஷ் நாராயணனும் அவரது குழுவும் இவ்விசை விருந்தை ஒரு இசை மருந்தாகவே மக்களுக்கு வழங்குகின்றனர். ஆதலால் பல தசாப்தங்களாக நடந்த கொடிய யுத்தத்தில் மறைந்த எம் நாட்டு மக்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி விட்டு இம்மருந்தை அருந்துவதே பொருத்தமானதாய் இருக்கும்.



இயலுமானவர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகிறோம் என தமிழிலும் ஆங்கிலத்திலும் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து உயிரிழந்தவர்களுக்காக அனைவரும் எழுந்து நின்று, ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

# இலங்கை தொடர்பில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ள முக்கிய விடயம்?

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி சீர்குலைவடைந்திருப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் எனும் கட்டமைப்புக்குள் அரச சட்டவாதி செயற்படும் முறை மிகமுக்கியமான காரணமாகும்.

சட்டத்துறை சார்ந்த விவகாரங்களில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கல் மற்றும் குற்றமொன்றை சட்டத்துக்கு அமைவாகக் கையாளல் ஆகிய இரண்டு பணிகளை சட்டமா அதிபர் முன்னெடுப்பதானது வெளிப்படையாகத் தெரியக்கூடிய முரண்பாடொன்றைத் தோற்றுவித்திருக்கின்றது என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இது குறித்து ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: சர்வதேச நாணய நிதியத்தினால் கடந்த செப்டெம்பர் மாதம் வெளியிடப்பட்ட இலங்கையின் ஆட்சியியல் தொடர்பான ஆய்வறிக்கையில், நாட்டில் இடம்பெற்ற குற்றங்கள் பற்றிய விசாரணைகளின் சுயாதீனத் தன்மை தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் குறித்து சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

அது மாத்திரமன்றி சுயாதீனமான அரச சட்டவாதி இல்லாமை குறித்தும், இது நாட்டின் தற்போதைய கட்டமைப்பு வலுவிழந்திருப்பதைத் தெளிவாகப் புலப்படுத்துவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கையில் சட்டத்தின் ஆட்சி சீர்குலைவடைந்திருப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் எனும் கட்டமைப்புக்குள் அரச சட்டவாதி செயற்படும் முறை மிகமுக்கியமான காரணம் என்று நாம் பல ஆண்டுகளாக சுட்டிக்காட்டி வருகின்றோம்.

மேலும் பல்வேறு தரப்பினரால் விமர்சிக்கப்பட்டுவந்த இந்த விடயம், தற்போது சர்வதேச நாணய நிதியத்தினாலும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. சட்டத்துறை சார்ந்த விவகாரங்களில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கல் மற்றும் குற்றமொன்றை சட்டத்துக்கு அமைவாகக் கையாளல் ஆகிய இரண்டு பணிகளை சட்டமா அதிபர் முன்னெடுப்பதானது வெளிப்படையாகத் தெரியக் கூடிய முரண்பாடொன்றைத் தோற்றுவித்திருக்கின்றது.(22ம் பக்கம் பார்க்க)


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# நீதி மறுப்பும் சட்ட மீறலும் அரசமைப்பு ஒழுங்கீனமும் ஜனநாயக படிமுறைகளை இடித்தழிக்கும் அபாயம்!

கட்டுரையாளர்:
கனடாவில் இருந்து
– பனங்காட்டான் –

நீதிபதி சரவணராஜா பிரச்சனைக்கான போராட்டத்தைத் தவிர தமிழர்களுக்கான தொடர் போராட்டங்களாக காணி அபகரிப்புகளுக்கு எதிரானதும் காணாமலாக் கப்பட்டோருக்குமானவை அமைந்துள்ளன. இவ்விரண்டுக்குமான போராட்டங்கள் நிரந்தரமானவையாகத் தொடரும் நிலைமையே பெரிதும் காணப்படுகிறது.

தீராத அல்லது தீர்க்கப்பட விரும்பாத பிரச்சனைகளாக ரணில் அரசு இவற்றைக் கையாண்டு வருகிறது. நாடாளுமன்ற அமர்வுகளில் தமிழ் எம்.பிக்களின் பெரும்பாலான உரைகள் இவ்விடயங்களை ஒட்டியதாகவே இடம் பெற்று வருகின்றன.

வடக்கு கிழக்குக்கு விஜயம் மேற்கொள்ளும் வெளிநாடுகளின் தூதுவர்களிடமும் ராஜதந்திரிகளிடமும் இவை தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆவணங்கள் கையளிக்கப்படுகின்றன. இவற்றினால் பயனேதும் கிடைக்குமோ என்பது தெரியவில்லை.

இது போதாதென்று, இந்திய பிரதமர் மோடியை சந்திக்க வேண்டுமென தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் கூடிக்கலைந்து, மீண்டும் கூடி ஆராய்ந்து வருகின்றன. மோடிக்கு ஏற்கனவே தமிழ்க் கட்சிகள் இணைந்து அனுப்பிய கடித விவகாரம் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் அவரது சட்டக் கல்லூரி மாணவன் எம்.ஏ.சுமந்திரனுக்குமிடையில் விவாத அரங்காக மாறியுள்ளது.

முன்னைய கடிதம் மோடிக்குக் கிடைத்ததா இல்லையா என்பது கேள்விக்குறியாகியுள்ள நிலையில், அதற்குப் பதில் வந்ததா இல்லையா என ஆராய்வதில் பயனில்லை. வடமாகாண சபைத் தலைவராகவிருந்த விக்னேஸ்வரன் இப்போது சகல விவகாரங்களிலும் தம்மை முதன்மைப்படுத்தி நிற்க முனைவதை அவதானிக்க முடிகிறது. ஆனால், இவரால் எதையும் ஒப்பேற்ற முடியாதிருப்பதையும் காணலாம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்தி (நல்லாட்சிக் காலத்தில் சுமந்திரன் செய்தது போன்று) அதனூடாக பல காரியங்களை நிறைவேற்ற முடியுமென இவர் எடுத்த எந்த முயற்சியும் இதுவரை காரியமாகவில்லை. வடமாகாண ஆளுநரை ரணில் விக்கிரமசிங்க விரைவில் பதவி நீக்குவாரென ஊடகங்களுக்கு பிரத்தியேக செய்தி ஒன்றை இவர் கொடுத்திருந்தார். ரணில் தம்மிடம் கூறினார் என்பதை நம்பி அந்த அறுந்த கயிற்றில் தொங்கும் நிலை இவருக்கு ஏற்பட்டது. மாகாண சபைக்கான ஆலோசனைச் சபை யோசனையையும் ரணில் ஏற்றுக் கொண்டதாக இவர் நம்பினார். ரணில் தம்மை ஏமாற்றி விட்டாரென்று பகிரங்கமாகக் கூறும் வழிபோக்கனாக விக்னேஸ்வரன் இன்று காணப்படுகிறார்.

இது போன்று, இந்தியப் பிரதமர் மோடியை சந்திக்க எடுக்கும் முயற்சியும் தோல்வியடையலாம். இந்தியா செல்வதற்கு மோடியின் அழைப்புக்காக காத்திருக்கிறோம் என்று தமிழரசின் மூத்த தலைவர் சம்பந்தன் சொல்லி ஒரு வருடமாகிறது என்பதை விக்னேஸ்வரன் நினைவிற் கொள்ள வேண்டும். நீதிச் சேவையில் நிரம்பக் கற்றுக் கொண்டவராக விக்னேஸ்வரன் இருப்பினும், அரசியலில் இன்னும் போதிய அனுபவத்தை அவர் பெறவில்லையென்பது தெரிகிறது. அதனாற்தான் போலும் எல்லா விடயங்களிலும் மூக்கை நுழைத்து அவமானங்களைச் சுமக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்.

அரசியலில் பழம் தின்று விதை போட்ட ரணில் விக்கிரமசிங்க ஒவ்வொருவராக அனைவரின் தலைகளையும் கழுவி வருகிறார். இது போதாதென்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பவைகளை உருவாக்கி அதனூடாக அரசியல் கட்சிகளையும் சமூக அமைப்புகளையும் ஓடித் திரிய வைத்துள்ளார். உருவாக் கப்பட்டுள்ள இரண்டு சட்ட வரைபுகளும் அரசதுறை அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்குவதாகவும், மனித உரிமை சட்டத்துக்கு இணங்காமல் மனித உரிமைகள் மீது கட்டுப்பாடுகளை ஏற்படுத்தக்கூடியவை என்றும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. இரண்டு சட்ட மூலங்களும் தெளிவற்ற வரையறைகளைக் கொண்டுள்ளனவென்றும் பேரவை குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், சட்ட முறையான ஆட்சிக்கு முற்றிலும் மாறுபட்டது என்று தெரிவித்துள்ள ஐ.நா.வின் நிபுணர் குழு, நடைமுறையிலுள்ள மிக மோசமான பயங்கரவாத தடைச் சட்டத்தின் குறைபாடுகளை புதியது நிவர்த்தி செய்யவில்லையென்றும் சுட்டியுள்ளது.

சர்வதேசம் இவ்வாறு கருத்துகளையும் கவலைகளையும் வெளியிட்டு வரும் வேளையில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணை செய்வதில்லை என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்தச் சட்டமூலம் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலிலிருந்து வாபஸ் பெறப்பட்டதே இதற்கான காரணம். இவ்வாறு அறிவிக்கப்பட்டிருப்பதால் சர்வதேசத்தின் அதிருப்திக்கு இலங்கை அரசு சார்பு நிலை எடுத்ததாகவோ, புதிய வரைவில் உலகம் எதிர்பார்க்கும் மாற்றங்கள் இடம்பெறும் என்றோ எதிர்பார்க்க முடியாது.

பிரச்சனைக்குரியதான நிகழ்நிலை காப்புச் சட்ட வரைபு திருத்தப்படுமென சட்ட மாஅதிபர் திணைக்களம் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளமையையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக நாற்பத்தைந்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. பொது அமைப்புகள், ஊடக அமைப்புகள், தனியார், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் என்போரால் இந்த மனுக்கள் தாக்கலாகியிருந்தன.

மோதகத்தை கொழுக்கட்டையாகவும், கொழுக்கட்டையை மோதகமாக மாற்றுவதும் போன்று இரண்டு சட்ட சட்ட வரைபுகளையும் ரணிலின் அரசு திருத்தம்(?) செய்து புது வடிவத்தில் மீளச் சமர்ப்பிக்கவுள்ளது. இது கூட சர்வ தேசத்தையும் மனித உரிமை அமைப்புகளையும் எத்தி விளையாடும் ஓர் உத்திதான். இதற்கான அடிப்படைக் காரணம் ஜனநாயகம் என்பது நாட்டில் இறந்துபோன ஒன்றாகிவிட்டது.

இதற்கான நிகழ்கால உதாரணமாக பொலிஸ் மாஅதிபரின் பணி நீடிப்பைப் பார்க்கலாம். வழமையாக ஒரு பொலிஸ் மாஅதிபர் ஓய்வு பெறுவதற்கு முன்னராகவே அடுத்தவர் யாரென்பது தெரிய வந்து விடும். பணிக்கால வரிசையில் மூத்த பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஒருவரே பதவி உயர்வு பெற்று பொலிஸ் மாஅதிபராவார். இதுவே முப்படைகளின் தளபதிகள் நியமனத்திலும் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை.

ஆனால் தற்போதைய பொலிஸ் மாஅதிபர் சி.டி.விக்கிரமரத்தினவின் சேவை நீடிப்பு முற்றுமுழுதாக அரசியல் கலப்பானதாகவும் ஜனநாயக விழுமியங்களுக்கு முரணானதாகவும் அமைந்துள்ளது. பதவியிலிருந்து ஓய்வு பெற்ற இவருக்கு ஏற்கனவே இரு தடவைகள் பணி நீடிப்பு வழங்கப்பட்டது. புதிதாக பொலிஸ் மாஅதிபர் ஒருவரை தெரிவு செய்யும் பொறுப்பானது அரசியலமைப்புச் சபை சம்பந்தப்பட்டது. இச்சபையின் தலைவர் நாடாளுமன்ற சபாநாயகர். மொத்தம் பத்து அங்கத்தவர்களில் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் அடங்குவர்.

இச்சபை அதிகாரபூர்வமாகக் கூடி சி.டி. விக்கிரமரத்தினவுக்கு பணி நீடிப்பு வழங்குவதில்லையென்று தீர்மானித்தது. அடுத்த ஓரிரு மணித்தியாலங்களுக்குள் அவருக்கு அடுத்த மூன்று வாரங்களுக்கு சேவை நீடிப்பை வழங்கி விட்டு ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்று விட்டார். அதாவது அரசியலமைப்புச் சபையின் முடிவை புறந்தள்ளி விட்டு இந்தப் பணி நீடிப்பு வழங்கப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டபோது அதற்கு சபாநாயகர் பதிலளித்தார். அரசியலமைப்புச் சபை இப்பதவிக்கு ஒருவரை பரிந்துரை செய்யலாம். ஆனால் தாம் விரும்பும் ஒருவரை நியமனம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு என்பது சபாநாயகரின் பதில். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாததைத் தவிர மற்றெல்லா அதிகாரங்களும் ஜனாதிபதிக்குண்டென்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன பதவியேற்ற வேளையில் தெரிவித்த கூற்றை அடியொற்றி ரணில் செயற்படுவது தெரிகிறது.

ரணில் நாடு திரும்பியதும் புதிய பொலிஸ் மாஅதிபராக அவரது விருப்புக்குரிய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கூன் நியமனம் பெறுவாரென்ற தகவல் கசிய விடப்பட்டுள்ளது. இது தான் உண்மையென்றால் புதிய நியமனங்கள், பதவி உயர்வுகள் ஆகியவைகளைத் தீர்மானிப்பதற்கு அரசியலமைப்புச் சபையொன்று தேவையா என்ற கேள்வி எழுகிறது.

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு வேட்புமனுக்களும் தாக்கல் செய்யப்பட்டு, தேர்தல் நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் அது நடத்தப்படவில்லை. அடுத்தாண்டு நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலையும் பிற்போட அரசாங்கம் எடுக்கும் செயற்பாடுகள் அம்பலமாகியுள்ளன. (இன்னொரு வாரப் பத்தியில் இதனை அலசலாம்). தேர்தல்கள் உட்பட ஜனநாயக வழிமுறைச் செயற்பாடுகளில் ஜனாதிபதி தலையிடக் கூடாதென்று இலங்கை சட்டத்தரணிகள் ஒன்றியம் ஒன்றிணைந்த அமைப்பு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது. அத்துடன், தேர்தலை பின்போடும் நோக்கில் மறுசீரமைப்புக் குழுவை நியமித்துள்ளமையையும் இந்த அமைப்பு கண்டித்துள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்றம் எதற்காக என்று நாடாளுமன்ற அமர்விலேயே கேள்வி எழுப்பியுள்ளார் ஒரு எம்.பி. இந்தக் கேள்வி நியாயமானது என்பதை சட்டத்தரணிகள் ஒன்றியத்தின் அறிவிப்பு நிரூபிக்கிறது.

ஜனநாயகம் என்பது ஐந்து அடுக்குகளைக் கொண்டது. சமூக ஜனநாயகம், கட்சி ஜனநாயகம், அரசியல் ஜனநாயகம், நிர்வாக ஜனநாயகம் என்பவை நேர்த்தியாக அமைந்தால் மட்டுமே நாட்டில் ஆட்சி ஜனநாயகம் என்ற இயந்திரம் சீராக இயங்க முடியும். இலங்கையில் எந்த அடுக்கிலாவது ஜனநாயகத்தைக் காணமுடிகிறதா?



Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 10



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**
**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**
**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**
**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**
**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**
**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**
**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**
**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

21 ஒக்டோபர் 2023 முதல் 27 ஒக்டோபர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 27வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா பேரின்பநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா பேரின்பநாதன் (லெப் கேணல் நாதன்) அவர்களது 27வது ஆண்டு நினைவு நாள் 26 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரகுநாதர் மயில்வாகனம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 21 ஒக்டோபர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர் களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 22 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வே.இ.இராசையா அவர்கள்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களின் 12வது ஆண்டு நினைவு நாள் 27 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராசையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம்

சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பு 6ஜ வதிவிடமாகவும் திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 21 ஒக்டோபர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### DR.சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை, கந்தர்மடம், மலேசியா, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் யாழ்ப்பாணம், கொழும்பு சட்டவைத்திய அதிகாரி Dr சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை அவர்களது 16வது ஆண்டு நினைவு நாள் 25 ஒக்டோபர் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.. Dr சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



21 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை சரவனை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது 9வது அண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





21 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரகுநாதர் மயில்வாகனம் அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



22 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



23 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சகாய நாதன் ஜஸ்லின் தம்பதிகளின் செல்வப்புதல்வன் ரேஷ்மனின் 21வது பிறந்த நன்நாளுக்காகவும் அவரது உடல் நலம் வேண்டிய பிரார்த்தனைக்காகவும் அவரது பெற்றோர்கள் உறவுகள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




23 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு கோணேஸ்வரன் இராசையா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கோணேஸ்வரன் இராசையா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச்சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



25 ஒக்டோபர் 2023 புதன்கிழமை மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை, கந்தர்மடம், மலேசியா லண்டன் கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்ப்பாணம் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி Dr சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





25 ஒக்டோபர் 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் மயூரன் சசிதரனின் 31வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் மயூரன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச்சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




26 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமை யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த லெப்.கேணல் நாதன் என்று அழைக்கப்படும் கந்தையா பேரின்பநாதன் அவர்களது 27வது அண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



26 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ராஜ்குமார் சுமதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாயிப்பிருந்தனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சாயிப்பிருந்தன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



27 ஒக்ரேபர் 2023 வெள்ளிக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் சமூகசேவையாளர் திரு விலோஜன் சிவதர்மமன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு விலோஜன் சிவதர்மன் அவர்கள் 19 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்

## 27வது ஆண்டு நினைவஞ்சலி



அரியாலையைப் பிறப்பிடமாகவும்
பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த

**லெப்.கேணல்**
**கந்தையா பேரின்பநாதன்**

மலர்வு:- 10.11.1964 உதிர்வு:- 26.10.1996

இயற்கை அழகு நிறைந்த தமிழ் ஈழத் திருநாட்டின்
அழகிய ஊராம் அரியாலையில் நீ பிறந்தாய்
தாய்மொழியையும் தாய் நாட்டையும் உயிராக மதித்தாய்
தாய் நிலத்தை விட்டு எங்கு நீ சென்றாய் - தம்பி
உறவுகளைக் காட்டிலும் உயர்ந்தது தாய்த்தேசம் என்பாயே
சுகம் தருவது மனித சுதந்திரம் மட்டும் தான் என்பாயே
தேசம் இழந்து சுகம் இழந்து நிர்க்கதியாய் நிற்கின்றோம்
உனை இழந்த சகோதரர்கள்
நாங்கள் செயலிழந்து தவிக்கின்றோம்
தம்பி உன் புன்சிரிப்பும்
கலகலப்பும் எப்போதும் நினைவிருக்கும்
உன் ஊர்த்தொண்டும்
பொதுப்பணியும் எப்போதும் நிலைத்திருக்கும்
உன் உயிர் உள்ள
உடல் மட்டும் நிலைக்கவில்லையே
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம்சாந்தி! ஓம்சாந்தி!ஓம்சாந்தி!

உன் பிரிவால் வாடும் சகோதர சகோதரிகள்

தகவல்:-
திருமதி யோகாம்பினை இலங்கேஸ்வரன்
(சகோதரி) 416 754 1221

Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 12


SKANDAVARODAYA O S A CANADA
Skanda Old Students' Association Canada
SKANDA NITE - 2023
TVI புகழ் மதவடி மன்னர்களின்
நகைச்சுவை நாடகம்
Natiya Samarpanaa Kalai Koodam
Rajini Mathivarnan
மாணவர்களின் நடனம் (Fusion)
S.M.DANCE CREW
BOLLYWOOD DANCE
Saturday
November 04, 2023 @5:30pm
நட்சத்திரா இசைக்குழு
இதய ராகங்கள்
இன்னிசை விருந்து
ரொறன்ரோ பிரபல பாடகர்கள்
NATCHATHRAA MUSIC GROUP
Kennedy Convention Centre
1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
More Info: 416-616-8751, 416-402-4495
& 647-454-9617


தமிழ் மிரர்
Tamil Mirror
Awards Gala 2023.
NOVEMBER
5
SUNDAY
4.00 PM
18
YEARS
ANNIVERSARY
CELEBRATION
DSN
The Golden Voice
T. Ramalingam
Motivational Speaker
Tamil Nadu
Deshan Styler
South African Music Sensation
Chinese Cultural Centre 5183 Sheppard Ave East Call: 416-697-0126

# பாலஸ்தீன இஸ்ரேல் யுத்தம் தமிழர்கள் யாருடைய பக்கம்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் வேகமெடுக்கத் தொடங்கியபோது 1970களின் இறுதியாண்டுகளிலும் 1980களின் முற்கூறிலும், தமிழ் இயக்கங்களான ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் போன்றன பாலஸ்தீனத்தில் படைதுறைப் பயிற்சிகளைப் பெற்றன.அ வ்வாறு பயிற்சி பெற்றவர்கள் தாயகத்தில் பிஎல்ஓ ரெய்னிஸ் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களிற் பலர் அந்த இயக்கங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்திருக்கிறார்கள். அவர்களிற் சிலர்–சுரேஷ் பிரேமச்சந்திரன், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் இப்பொழுதும் தமிழ் அரசியலரங்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பக் கால கட்டங்களில் பலஸ்தீனம் தமிழ் மக்களின் நட்பு சக்தியாக இருந்தது. அந்நாட்களில் கவிஞர் நுகுமான் தொகுத்த பாலஸ்தீனக் கவிதைகள் என்ற தொகுப்பு தமிழ்ப் போராளிகளால் விரும்பி வாசிக்கப்பட்டது. அந்நூல் பல இளம் கவிஞர்கள் மீது செல்வாக்குச் செலுத்தியது. அக்கால கட்டத்தில் இஸ்ரேல் இலங்கை அரசாங்கத்திற்கு போர்த் தளபாடங்களை வழங்கியது அது கெடுபிடிப் போர்க் காலகட்டம்.

1992இல் இரஸ்ரேலிய உளவு நிறுவனமாகிய மொசாட்டின் உளவாளிகளில் ஒருவரான விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி என்பவர் ஒரு நூலை வெளியிட்டார். By Way of Deception:The Making and Unmaking of a Mossad Officer எனப்படும் அந்த நூல் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியது. அந்த நூலை வெளியிட்ட விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி கனடாவில் தஞ்சமடைந்து விட்டார். அந்த நூலானது மொசாட் எவ்வாறு இலங்கைத்தீவில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளுக்கும் உதவிகளை புரிந்தது என்ற தகவல்களை வெளிப்படுத்தியது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் ஒரே மைதானத்தின் இருவேறு பகுதிகளில் பயிற்சி வழங்கப்பட்டது பற்றிய விபரங்கள் அந்நூலில் உண்டு.

மேலும் இலங்கை அரச படை அதிகாரிகள் தொடர்பாக தரக்குறைவாகச் சித்தரிக்கும் பகுதிகளும் உண்டு. இலங்கை அரச படை அதிகாரிகள் ஒருவர் துறைமுகத்தில் வக்யூம் கிளினரோடு இணைக்கப்பட்டிருந்த ஸ்கானிங் திரையைக் காட்டி இதில் என்ன தெரியும் என்று கேட்ட பொழுது, நீருக்கடியில் ரகசியமாகச் சுழியோடி வருபவர்களின் குருதிப்பிரிவு உட்பட எல்லா விவரங்களையும் இது காட்டும் என்று ஒரு மொசாட் அதிகாரி அவருக்கு கூறுகிறார்.

ஏன் அப்படி பொய் சொன்னாய் என்று கேட்டதற்கு அவர்கள் இப்பொழுது தான் காட்டிலிருந்து வந்திருக்கிறார்கள் என்ற தொனிப்பட அவர் பதில் கூறியதாக ஒரு ஞாபகம். இந்த நூலை விடுதலைப் புலிகள் இயக்கம் வஞ்சகத்தின் வழியில் என்ற தலைப்பில் மொழி பெயர்த்து தனது போராளிகளுக்கு விநியோகித்ததாகவும் ஒரு ஞாபகம். அந்த நூல் இலங்கை அரசு படைகளை அவமதிக்கிறது என்று கூறி அப்போதிருந்த ஜனாதிபதி பிரேமதாச விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கிக்கு எதிராக வழக்குத் தொடுக்க முற்பட்டதாகவும் ஒரு ஞாபகம்.

இந்நூல் வெளிவந்த அடுத்தாண்டு, 1993இல் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின் விளைவாக இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் ஒஸ்லோ உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டது. உடன்படிக்கையின்படி பலஸ்தீனர்களுக்கு ஒரு தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இக்கட்டமைப்பு இலங்கைத்தீவில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிகம் நட்பாக காணப்பட்டது. தொடக்க காலத்தில் இருந்தே மகிந்த பாலஸ்தீனத்தின் நண்பனாக இருந்து வருகிறார். பலஸ்தீன–சிறீலங்கா சகோதரத்துவ அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் அவர். 2014ஆம் ஆண்டு அவர் பலஸ்தீன அதிகார சபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு விஜயம் செய்தார். அங்கே அவருக்கு அந்நாட்டின் அதி




உயர் விருது ஆகிய Star of Palestine -பலஸ்தீன நட்சத்திரம் விருது வழங்கப்பட்டது. அங்குள்ள ஒரு வீதிக்கு மகிந்தவின் பெயர் சூட்டப்பட்டது.

இனப்படுகொலை மூலம் மகிந்த, தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடித்ததாக தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்த ஓர் அரசியற் சூழலில் ,ஐநாவில் மகிந்தவுக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் பலஸ்தீனம் மேற்கண்டவாறு மஹிந்தவைக் கௌரவித்தது.

இப்படிப்பட்டதோர் வரலாற்றுப் பின்னணியில், இப்பொழுது வெடித்திருக்கும் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான போரில் தமிழ் மக்கள் எப்படிப்பட்டதொரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்? தர்மத்தின் அடிப்படையில் சொன்னால், போராடும் தேசிய இனம் என்ற அடிப்படையில் சொன்னால், பாலஸ்தீனத்தைத் தான் ஆதரிக்க வேண்டும். காசாவில் இப்பொழுது என்ன நடக்கின்றதோ அது தான் வன்னி கிழக்கிலும் நடந்தது.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக பெரும்பாலான அரபு நாடுகள் உண்டு. ஆனால் தமிழ் மக்களுக்கு ஆதரவாக வெளிப்படையாக எந்த ஒரு நாடும் அன்றைக்குக் குரல் கொடுக்கவில்லை. தமிழ்மக்கள் தனித்து விடப்பட்டிருந்தார்கள். ஏறக்குறைய முழு உலகத்தாலும் சுற்றி வளைக்கப்பட்டிருந்த ஒரு நிலை. பலஸ்தீனர்களுக்கு உணவு, மருந்து, தார்மீக ஆதரவு போன்றவற்றைக் கொடுப்பதற்கு அரபு நாடுகள் உண்டு. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு யார் இருந்தார்கள்?

அதேசமயம் இஸ்ரேலுக்கு அதன் தொட்டப்பாக்களாகிய மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து தார்மீக ஆதரவையும் ஆயுத தளபாடங்களையும் வழங்கி வருகின்றன. குறிப்பாக ஆசிய வட்டகைக்குள் இந்தியா போர் தொடங்கிய உடனேயே இஸ்ரேலுக்கு தன் ஆதரவை தெரிவித்துவிட்டது.

இப்பொழுது மேற் சொன்னவற்றை தொகுத்துப் பார்க்கலாம். ஒரு காலம் தமிழ் மக்களுக்கு ஆதரவாக காணப்பட்ட பலஸ்தீனம் பின்னாளில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிஉயர் விருதை வழங்கியது. அதே சமயம் இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுதங்களை விநியோகித்த இஸ்ரேல் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் பயிற்சிகளை வழங்கியதாக விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி கூறுகிறார். இப்பொழுது இஸ்ரேலை ஆதரிக்கும் மேற்கு நாடுகள் ஐநா மனித உரிமைகள் பேரவையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன. அப்படியென்றால் இது விடயத்தில் ஈழத் தமிழர்கள் யாருடைய பக்கம் நிற்க வேண்டும்? தர்மத்தின் அடிப்படையில் சொன்னால் பலஸ்தீனத்தின் பக்கம்தான். ராஜதந்திரத்தின் அடிப்படையில் பார்த்தால்? முதலில் அரசியலில் தர்மம் சார்ந்த நிலைப்பாடுகள் உண்டா என்று பார்க்கலாம். நவீன அரசியலைப் பொறுத்தவரை அறம், தர்மம், நீதி என்று எதுவும் கிடையாது. அரசியல், ராணுவ, பொருளாதார நலன் சார்ந்த அருவருப்பான பேரம் மட்டும் தான் உண்டு.

உதரணமாக, யூதர்களை எடுத்துக் கொள்வோம். உலகின் மிக நீண்டகாலம் புலப்பெயர்ந்த மக்கள் யூதர்கள் தான். சுமார் இரண்டு ஆயிரம் ஆண்டு கால புலப்பெயர்ச்சி அது. அதனால் உலகில் அதிகம் ஐரோப்பிய மயப்பட்ட ஆசியர்களாக அவர்கள் மாறினார்கள். கடந்த நூற்றாண்டில் யூதர்கள் ஐரோப்பாவெங்கும் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.

இரண்டாம் உலகமகா யுத்தச் சூழலில் சுமார் 6 மில்லியன் யூதர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த இனப்படுகொலையின் குழந்தைதான் இஸ்ரேல். இன்னொரு விதமாகச் சொன்னால் யூதப் புலப்பெயர்ச்சியின் குழந்தையே இஸ்ரேல். ஆனால் ஓர் இனப்படுகொலையின் விளைவாக உருவாகிய யூததேசம், இன்னொரு இனப்படுகொலைக்குக் காரணமாகியது. உலகில் அதிகம் இனப்படுகொலைக்கு உள்ளாகிய ஒரு மக்கள் கூட்டம் சிறிய பலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்கின்றது. உலகின் மிகப் பெரிய இனப்படுகொலையில் இருந்து இஸ்ரேல் கற்றுக் கொள்ளாத அறத்தை, தர்மத்தை, நீதியை வேறு யாரிடமிருந்து எதிர்பார்க்கலாம்?

ஜனநாயகம், மனிதஉரிமைகள் போன்றவற்றை அரசியல் உபகரணங்களாகப் பயன்படுத்தும் மேற்கத்திய நாடுகள் தான் இஸ்ரேலின் தொட்டப்பாக்கள். கடந்த 18 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்கப் பிரதிநிதி பேசத் தொடங்கிய பொழுது, அங்கே பிரசன்னமாகியிருந்த பெரும்பாலான நாடுகளின் பிரதிநிதிகள் எழுந்து நின்று அமெரிக்கப் பிரதிநிதிக்கு தமது முதுகைக் காட்டியபடி நின்றார்கள். நிகழும் யுத்தத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு எதிரான நடவடிக்கை அது. ஆனால் அதே அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள்தான் ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்டு வருகின்றன.

இஸ்லாமிய நாடாகிய துருக்கி அமெரிக்கா தலைமையிலான நோட்டோவுக்குள் அங்கம் வகிக்கின்றது.ஆனால் ஹமாசுக்கு உதவி புரியும் நாடுகளில் துருக்கி முக்கியமானது. ஒருபுறம் அது ஹமாசுக்கு உதவி செய்கிறது. இன்னொருபுறம் அமெரிக்கக் கூட்டணிக்குள் காணப்படுகின்றது.

கியூபா ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் பக்கம் தான் நிற்கின்றது.அது போராடி வென்ற ஒரு நாடு. ஈழப் போராட்டத்தின் தொடக்கத்தில் கியூபாவும் ஓர் இலட்சிய முன்மாதிரியாகப் போற்றப்பட்டது. ஈழப் போராளிகள் சிலர் தமக்கு கஸ்ரோ என்று பெயர் வைத்துக் கொண்டார்கள். ஆனால் கியூபா, ஐநாவில் தமிழ் மக்களின் பக்கம் நிற்கவில்லை. எனவே இங்கு தர்மம் ஓர் அளவுகோல் அல்ல. உலகில் எந்த ஒரு நாடும் அது சிறியதோ அல்லது பெரியதோ, தனது நலன் சார்ந்த முடிவுகளைத் தான் எடுக்கும். நலன்சார்ந்த உறவுகளைத் தான் வைத்துக் கொள்ளும். அறம் சார்ந்து அல்ல.

அரசுடைய தரப்புக்களே அவ்வாறு முடிவு எடுக்கும் பொழுது அரசற்ற சிறிய மக்கள் கூட்டமாகிய ஈழத் தமிழர்கள் எப்படிப்பட்ட முடிவை எடுக்க வேண்டும்?

நீதிமான்களிடம் தான் ஈழத்தமிழர்கள் நீதியை கேட்கலாம் என்றால் உலகில் எங்கேயும் நீதியை கேட்க முடியாது. தேவ ராஜ்யத்திடம் தான் கேட்கலாம். அல்லது மறைந்த மலையக தலைவர் சௌமியமூர்த்தி தொண்டைமானைப் போல யாகம் செய்யலாம். நவீன அரசியலைப் பொறுத்தவரை பூமி தர்மத்தின் அச்சில் சுற்றவில்லை.அது முழுக்கமுழுக்க நலன்களின் அச்சில ̇தான் சுற்றிக் கொண்டிருக்கிறது. அப்படியென்றால் ஈழத்தமிழர்கள் இப்பொழுது என்ன நிலைப்பாட்டை எடுப்பது?

ஈழத்தமிழர்கள் மத்தியில் தோன்றிய ஆன்மீகவாதியும் எழுத்தாளரும் அறிஞரும் ஆகிய மு.தளையசிங்கம் ஒரு வார்த்தையை பயன்படுத்துவார். அது தான் சத்திய தந்திரம்

மு.தளையசிங்கம் ஈழப்போரின் முன்னோடி இலக்கியவாதிகளில் ஒருவர். அவர் எழுதிய'' ஒரு தனி வீடு'' நாவல் ஒரு தனி நாட்டுக்கான போராட்டத்தை தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தியது என்று அவருடைய ஆன்மீக நண்பர்கள் கூறுவார்கள். சத்திய தந்திரம் என்றால் என்ன? மகா பாரதத்தில் கிருஷ்ணர் செய்வது அதைத் தான். பாரதப்போரில் பாண்டவர்கள் வென்றது புஜபலத்தால் அல்லது ஆயுத பலத்தால் அல்லது படை பலத்தால் மட்டும் அல்ல. பெருமளவுக்கு கிருஷ்ணருடைய புத்தி பலத்தால் தான்.

மகாபாரதத்தை வேறு வார்த்தைகளில் சொன்னால் கிருஷ்ண தந்திரம் எனலாம். அதைத் தான் தளையசிங்கம் சத்திய தந்திரம் என்று சொன்னாரோ தெரியவில்லை.

ஆனால் தமிழ் மக்கள் தமது போராட்டத்தின் இதயமாக இருக்கும் அறத்தைக் கைவிடாமல், உலக ஒழுங்குக்கு ஏற்ப நெளிவு சுழிவோடு நடந்து கொள்வது என்றால் அது தான் ஒரே வழி.

அதை கிறிஸ்துவின் வார்த்தைகளில் சொன்னால் இதயத்தில் புறாக்களைப் போல் கபடம் இல்லாமலும் செயலில் பாம்புகளைப் போல் தந்திரமாகவும் நடந்து கொள்வது.

# மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்

02.02.1937



ஆண்டவன் அடியில்

21.10.2023

## மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும்
## யாழ்.கந்தர்மடத்தை வதிவிடமாகவும்
## கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

# திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா

மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடம், இந்தியா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ண குமாரி நடராஜா அவர்கள் 21 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி அருணாசலம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி நாகலிங்கம் நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும்

காலஞ்சென்ற முன்னாள் பிரசித்த நொத்தாரிசு திரு நடராஜா நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும்

வரகுணன் (சுவிஸ்) குணநிதி (இங்கிலாந்து) காலஞ்சென்ற கிருபானந்தன், தேவானந்தன் (சுவிஸ்) குகானந்தன் (இங்கிலாந்து) காலஞ்சென்ற ஒப்பிலானந்தன், கேதாரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்

சுபந்திரா (இங்கிலாந்து) காலஞ்சென்ற சாந்திமதி, திருபுரசுந்தரி (சுவிஸ்) தனேஸ்வரி (இங்கிலாந்து) ரமா (இந்தியா) விஜிதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்

டிலானி, ஜெகனி, தனுஷன், வராஹி, கோகுல், தினோரா, ரிச்சிகா, விக்னேஷ்வர், துசான், சுவேதா ஆயோரின் பாசமிகு பேத்தியாரும்

காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற சாந்தகுமாரி, காலஞ்சென்ற ராமகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்

கணேசன் (கனடா) பாலாம்பிகை (கனடா) சுதாசினி (சிங்கப்பூர்) ஆயோரின் பாசமிகு பெரிய தாயாரும்

காலஞ்சென்றவர்களான அருணாசலம், ராமகிருஷ்ணன் மற்றும் புஸ்பம் (மலேசியா) செல்வகுமாரி (இங்கிலாந்து) கோபிகிருஷ்ணா (கனடா) சகிஷ்ணா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்

காலஞ்சென்ற டாக்டர் சுப்பிரமணியம், காலஞ்சென்ற மல்லிகைபுஸ்பம், தவயோகி (கனடா) காலஞ்சென்றவர்களான செல்லையா, தங்கம்மா கியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை இலக்கம் 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1 இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home & Cremation Centre இல் மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் 29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை அதே இடத்தில் 10.00 மணி முதல் 12.00 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு 12.00 மணி முதல் 2.00 மணி வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று 2.30 மணியளவில் இலக்கம் 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0 இல் அமைந்துள்ள Highland Hills Funeral Home & Cemetery இல் தகனம் செய்யப்படும். இவ்வறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**தகவல்:- கேதா (மகன் - கனடா) 416 5584208 வரகுணன் (மகன் - சுவிஸ்) 41615543273**

**குணநிதி (மகன் - இங்கிலாந்து) 2084718846 தேவானந்தன் (மகன் - சுவிஸ்) 41717401743**

**குகானந்தன் (மகன் - இங்கிலாந்து) 7459814357**

Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 17





# இஸ்ரேலைக் கண்டிக்கும் தகுதி யாருக்குண்டு?

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



பாலஸ்தீனிய இஸ்லாமிய அமைப்பான ஹமாஸ் கடந்த 7 ஆம் திகதி ,ஸ்ரேலிய மக்கள் மீது திடீர் தாக்குலை மேற் கொண்டிருந்தது. ஹமாஸ் எனப்படும் குறித்த அமைப்பானது, இஸ்ரேலை அழிப்பதை கொள்கையாகக் கொண்டி ருக்கும் பாலஸ்தீனிய ஆயுத அமைப்பா கும். அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் பலவற்றால் ஹமாஸ் ஒரு பயங் கரவாத அமைப்பாக பட்டியிலிடப்பட்டு ள்ளது.

யூதர்களின் பிரதான விடுமுறை தினத் தின் போதே ஹமாஸ் இந்தத் தாக்கு தலை மேற் கொண்டிருந்தது. இது ஒரு இராணுவ தாக்குதல் அல்ல. மாறாக முற்றிலும் யூத சிவிலியன்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்ட மோச மான தாக்குதலாகும். இதன்போது 1,200 இற்கும் மேற்பட்ட யூதர்கள் கொல் லப்பட்டனர். சிறுவர்கள், வயதானவர்கள், பெண்கள் எனப் பலர் பணயக்கைதி களாக கொண்டு செல்லப்பட்டிருக்கி ன்றனர். யூதக் குடியிருப்புக்குள் நுழை ந்த ஹமாஸ் ஆயுததாரிகள், வீடு வீடா கச் சென்று யூதர்களை வெளியில் இழுத்து கொலை செய்திருக்கின்றனர். பலர் அவர்களது பிள்ளைகளின் முன் னாலேயே சுடப்பட்டிருக்கின்றனர்.

இது பற்றி கருத்துக் கூறும் ஹப்று பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் உலகப் புகழ்பெற்ற வரலாற்றியலாளரு மான யுவாடநுவால் ஹராரி, ஹமாஸின் தாக்குதல் யூதர்களின் மீது உளவியல் யுத்தமொன்றை முன்னெடுக்கும் நோக் கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டி ருப்பதாக கூறுகின்றார். மிகவும் கொடூர மான இஸ்லாமிய பயங்கரவாத அமைப் பான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தாக்கு தல் போன்றே, ஹமாஸின் தாக்குதல் நடவடிக்கைகளும் நன்கு திட்டமிடப் பட்டிருந்ததாக ஹராரி கூறுகின்றார்.

ஹராரி இஸ்ரேல் அரசின் அணுகுமுறை கள் தொடர்பிலும் விமர்சனங்களை முன் வைக்க தயங்காத ஒருவர். பல தலை முறைகளுக்கு யூத பாலஸ்தீனிய மோதல் கள் தொடர வேண்டும் என்பதே, ஹமாஸ் தாக்குதலின் உள்நோக்கமென் றும் அவர் கூறுகின்றார். திட்டமிட்ட வகையில் யூத மக்கள் .இலக்கு வைத்து கொல்லப்பட்டிருப்பதை நோக்கும் போது, ஹராரியின் கணிப்பு மிகவும் சரியானது.

ஹமாஸின் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலிடம் அமைதியை எதிர்பார்க்க முடியுமா? நிச்சயமாக இல்லை. யூத குடியிருப்புகள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இஸ்ரேல், யுத்தத்தை பிரகட னம் செய்து ஹமாஸை துடைத் தழிப்பதே இந்த யுத்தத்தின் இலக்கென் றும் இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு சூளுரைத்தார். அப்பாவி யூத மக்கள் மீதான ஹமாஸின் தாக்குதலின் விளைவு களை அப்பாவி பாலஸ்தீனிய மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். பாலஸ்தீனியர்களின் காஸா பகுதி சுடு காடாகி வருகின்றது. வைத்தியசாலை மீது விழுந்த குண்டுகளால், ஒரே நேரத்தல் 500இற்கும் மேற்பட்ட பாலஸ் தீனியர்கள் கொல்லப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. இதனை இஸ்ரேலிய படைகளே மேற்கொண்டதாக பலரும் குற்றம் சாட்டி வருகின்ற நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனோ, இதற்கும் இஸ்ரேலுக்கும் தொடர் பில்லை, இது வேறொரு தரப்பால் செய்யப் பட்டிருப்பதாக கூறியிருக்கின் றார். இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தத்தைத் தொடர்ந்து, நமது தமிழ் சூழலிலும் இதன் பிரதிபலிப்பை காண முடிகின் றது. காஸா பகுதியிலுள்ள வைத்திய சாலை தாக்கப்பட்ட சம்பவத்தை பாரா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கண்டித்திருக்கின்றார். இது வெறுக்கத் தக்க போர் குற்றமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதேபோன்று ,இன்னும் ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளும் பாலஸ்தீனியர்களு டன் ஈழத் தமிழர்கள் மனதளவில் இணைந்திருக்க வேண்டும் என்றவாறு தங்களின் கதைகளை சொல்லியிருக் கின்றனர்.

மானுடத்தின் மீதான நேயத்தினடிப்படை யில் உலகில் எப்பகுதியில் மக்கள் பாதி ப்புகளை எதிர் கொண்டாலும் அதன் மீதான நமது கரிசனையை காண்பிப்ப தில் தவறில்லை. நாங்களும் அவ்வாறான பாதிப்புகளை எதிர் கொண்ட ஒரு மக்கள் கூட்டமென்னும் வகையில் காஸா பகுதியில் அகப்பட்டிருக்கும், அப்பாவி பாலஸ்தீனிய மக்கள் தொடர் பில் நமது கரிசனைகளை வெளிப்படுத்த வேண்டுமென்று ஒருவர் கூறினால் அதில் தவறில்லை.

ஆனால் அப்பாவி மக்கள் கொல்லப்படும் போது, மக்கள் மீதான கரிசனையில் பக்கச்சார்பு இருக்கக் கூடாது. எவராயி னும் அவர் மக்கள் தான். இந்த அடிப் படையில் சிந்தித்தால் மட்டுந் தான், நமது எண்ணத்தில் பரிசுத்தம் தெரியும். ஆனால் தமிழ் சூழலில் பாலஸ்தீனம் தொடர்பில் நீலிக்கண்ணீர் வடிக்க முற்படும் நமது தமிழ் அன்பர்கள் எவரிடமும் அந்த பரிசுத்தம் இல்லை என்பது தநான் பிரச்சினையாகும்.

பாலஸ்தீனியர்களுக்கும் நமக்குமுள்ள உறவு என்ன? இப்படியொரு கேள் வியை கேட்டால் அதற்கான பதில் இப்படியிருக்கும். ஒரு காலத்தில் பாலஸ் தீனம் நமது விடுதலை இயக்க போராளிகளுக்கு பயிற்சியளித்தது. எமது போராட்டத்திற்கான தார்மீக ஆதரவை அவர்கள், அன்று வழங்கியவர்கள். உண்மை தான். ஆனால் அப்போ திருந்த பாலஸ்தீனம் யசீர் அரபாத்தின் பாலஸ்தீனமாகும். இப்போதிருப்பது, இஸ்லாமிய சகோதரத்துவ கருத்தியலால் வழிநடத்தப்படும் ஹமாஸின் பாலஸ்தீன மாகும். இந்த அடிப்படையில் விவாதிப் பதாயின் விடுதலைப்புலிகளின் ஆதரவா ளர்கள் அனைவரும் இஸ்ரேனுடன் தான் நிற்க வேண்டும். ஏனெனில் அன்றைய சூழலில் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு இஸ்ரேலிய உளவுத் துறையான மொசாட் பயிற்சியளித்த கதை பிரபலமானது. ஆரம்பத்தில் இரகசியமாக இருந்த விடயம், பின்னர் மொசாட் அதிகாரியான விக்டர் ஒட்ரோ வ்ஸ்கி, எழுதிய மோசடி வழிகளின் ஊடாக என்னும் நூல் வெளியானதைத் தொடர்ந்து இது வெளிச்சத்திற்கு வந்தது.

அந்த நூலில் இலங்கை இராணுவத்தி ற்கும் சம வேளையில் பொதுவாக புலி கள் என்ற ழைக்கப்படும் இலங்கைத் தமிழ் ஆயுத அமைப்பிற்கும் மொசாட் பயிற்சியளித்த கதையை அவர் விபரித் திருக்கின்றார். இரண்டு தரப்புகளும் ஒருவரையொருவர் சந்தித்து விடக் கூடாதென்னும் தனது மேலதிகாரியின் உத்தரவிற்காக தான் எவ்வாறு அவதா னந்துடன் செயற்பட வேண்டியிருந்தது பற்றியெல்லாம் விக்டர் விபரித்திருக்கின் றார்.

அந்தக் காலத்தில் புலிகள் என்றழைக்கப் பட்டவர்கள் விடுதலைப்புலிகள் அமை ப்பு மட்டும் தான். இந்த அடிப்படையில் சிந்திப்பதாயின், ஈழத்தமிழர்கள் மனதள வில் இஸ்ரேலுடனுமல்லவா நிற்க வேண் டும். ஆனால் பிரச்சினை வேறு. அன் றைய அரசியல் சூழலில், ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு நோக்கத்திற்காக ஈழ ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளிக்க முன்வந்திருந்தது. பின்னர், அனைவரை யும் ஓரங் கட்டும் நோக்கில், அனை த்தையும் இந்தியா பொறுப்பெடுத்தது.

இந்தியாவின் பயற்சி மற்றும் நிதியுதவி யில் தான் சாதாரணமாக இருந்த தமிழ் ஆயுத அமைப்புகள் திடீரென்று வீங் கின. இலங்கை இராணுவத்திற்கு பெரும் சவாலாக மாறின. இந்த இடத்தில் ஈழத் தமிழர்கள் இந்தியாவுடன் தான் அதிகம் மனதளவில் நிற்க வேண்டும்.

ஆனால் விடயங்களை தொகுந்து நோக்கினால் அன்றைய சூழல் வேறு, இன்றைய சூழல் வேறு. ஒரு காலத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றோம் என்பதற் காக, ஹமாஸால் வழி நடத்தப்படும் பாலஸ்தீனத்துடன் ஈழத் தமிழர்கள் மன தளவில் நிற்க வேண்டுமென்று கூறுவது சிறுபிள்ளைத்தனம், இன்றைய சர்வதேச அரசியல் ஒழுங்கை புரிந்து கொள்ள முடியாதவர்களே, இவ்வாறு உளறிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் பாதிக்கப்படும் மக்களின் பக்க மாக எங்களுடைய கரிசனையை காண் பிக்க வேண்டுமென்று ஒருவர் கூறினால், அது சரியானது. ஆனால் அதிலும் ஒரு சிக்கலுண்டு. அப்பாவி யூத மக்கள் கொல்லப்படும் போது, அமைதியாக உறங்கிவிட்டு, பின்னர் திடீரென்று விழிந்து, பாலஸ்தீனியர்களுக்காக குரல் கொடுப்பதாக கூறுவது ஒரு மோசடி யாகும்.

இரு வாரங்களுக்கு முன்னர் ஹமாஸ் அப்பாவி யூத மக்களை கொன்றபோது, அது தொடர்பில் எவரும் கண்டனங் களை வெளியிடவில்லை. பாராளுாமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஏன் யூத மக்களுக்காக பேசவில்லை? இப்போது பாலஸ்தீனியர்கள் மீது திடீர் கரிசனை வரக் காரணமென்ன? ஒருவேளை பாலஸ்தீனியர்களுக்காக குரல் கொடுத் தால், இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் சந்தோசப்படுவார்களென்று சுமந்திரன் எண்ணுகின்றாரோ!

அப்பாவி மக்களை இலக்கு வைக்கும். அணுகுமுறையை எவர் மேற் கொண்டாலும் நாம் அதனை கண்டிக்க வேண்டும்.



Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 18



# சீனப் பயணம் வெற்றிகரமானதா?

சீனாவின் பெய்ஜிங்கில் பி.ஆர்.ஐ. எனப்படும், பட்டையும் பாதையும் திட்டத்தின் மூன்றாவது மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்று விட்டு நாடு திரும்பியிருக்கிறார்.

கடந்த ஆண்டு பெரும் குழப்பங்களுக்குள் நாடு சிக்கியிருந்த போது, முதலில் பிரதமராகவும், பின்னர் ஜனாதிபதியாகவும் பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்கா, பிரித்தானியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளுக்குப் பயணம் செய்திருந்த போதும், சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டது இதுவே முதல் முறை.

இந்தியாவுக்கு கூட மூன்று மாதங்களுக்கு முன்னர் தான், அவரது முதல் பயணம் இடம்பெற்றது. இலங்கையின் பொருளாதாரத்துக்கு கை கொடுக்கும் முக்கியமான இரண்டு நாடுகள் இந்தியாவும் சீனாவும் தான்.

பொருளாதார நெருக்கடியின் போது 4 பில்லியன் டொலர்களைக் கொடுத்தது இந்தியா. சீனா, 8 பில்லியன் டொலருக்கும் அதிகமான கடன்களைக் கொடுத்திருக்கிறது.

இந்த இரண்டு நாடுகளுடன் இராஜதந்திர ரீதியான நெருக்கத்தையும், பொருளாதார உறவுகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இலங்கைக்கு இருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில், இந்தியாவும் சீனாவும் சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் கொண்டு வரக்கூடிய நாடுகளாகவும் இருக்கின்றன.

அதனால் தான் அண்மையில் சீனா, இந்தியா உள்ளிட்ட ஐந்து நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை அரசாங்கம் விசா கட்டணங்களை அறவிடுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறது.

இலங்கையில் பொருளாதார வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும், இலங்கைக்கு பொருளாதார வாய்ப்புகளை வழங்குவதற்கும் இந்த இரண்டு நாடுகளும் தயாராக இருக்கின்றன.

ஆனால் இந்தப் பொருளாதார உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்வதற்கு இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் போட்டி தான் தடையாக இருக்கிறது. இந்த இரண்டு நாடுகளும் தங்களை எதிரி நாடுகளாக அடையாளப்படுத்திக் கொள்வதில்லை. கடுமையான போட்டி நாடுகளாகவே அடையாளப்படுத்திக் கொள்கின்றன.

ஆனாலும் மறைமுகமாக, இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஒரு பனிப்போர் நடந்து கொண்டிருக்கிறது என்பது தான் உண்மை.

சீனக் கடற்படையின் ஆய்வுக் கப்பலான ஷி யான் 6 ஐ இலங்கைக்குள் வர அனுமதிப்பது தொடர்பான விவகாரத்தில் காணப்படுகின்ற இழுபறி ஒன்றே, இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள், மோதல்களை வெளிப்படுத்த போதுமானது.

இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையிலான மோதல் அல்லது முரண்பாடுகளைத் தாண்டியே பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள வேண்டிய நிலையில் இலங்கை இருக்கிறது.

இலங்கையின் புவிசார் அமைவிடம் தான் இந்த சிக்கலுக்குக் காரணம். இலங்கையின் அமைவிடத்தை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக, அல்லதுதங்களின் பாதுகாப்புக்காக பயன்படுத்திக் கொள்வதற்காக, அல்லது தங்களுக்கு எதிராக வேறெவரும் பயன்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத் தான், இந்தியாவும் சீனாவும் இந்தப் போட்டியில் ஈடுபடுகின்றன.

இந்த புவிசார் அமைவிட முக்கியத்துவத்தினால், இந்தியாவினதோ, சீனாவினதோ சிறகுக்குள் மாத்திரம் இருந்து விட முடியாத சிக்கல் நிலையும் இலங்கைக்கு இருக்கிறது.

இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு- கொழும்பு தன்னை ஒரு அணிசேரா நாடு என்று காண்பிக்கவே முயற்சித்து வந்திருக்கிறது. ஆனால் அதற்கு இதுவரை மேற்கொண்ட எந்த முயற்சிகளும், முழுமையான பலனைக் கொடுத்திருக்கவில்லை.

சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப, பிரச்சினைகளின் தன்மைக்கு ஏற்ப அவ்வப்போது



இந்த சமநிலைக்கான போராட்டம் இருந்து கொண்டு தான் இருக்கிறது.

இத்தகைய போராட்டம் தீவிரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் தான், சர்வதேச ஒத்துழைப்புக்கான மூன்றாவது பி.ஆர்.ஐ. மாநாட்டுக்காக பெய்ஜிங் சென்றிருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்த மாநாட்டுக்கான அழைப்பைக் கருத்தில் கொண்டு அவரது பயணம் திட்டமிடப்பட்டிருந்தாலும், சீனாவிடம் அதிகளவு பொருளாதார ஒத்துழைப்புகள், முதலீடுகளை பெற்றுக் கொள்வதும், கடன் மறுசீரமைப்பு உத்தரவாதங்களை பெற்றுக் கொள்வதும் தான் அந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

இந்தப் பயண நோக்கத்தை ரணில் விக்கிரமசிங்கவினால் அடைய முடிந்திருக்கிறதா என்பது தான் இப்போதுள்ள முக்கியமான கேள்வி.

சர்வதேச ஒத்துழைப்புக்கான மூன்றாவது பி.ஆர்.ஐ. மாநாட்டில் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.அதன்படி, அடுத்த 10 ஆண்டுகளில் சீனா 100 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக பி.ஆர்.ஐ. திட்டத்தில் முதலீடு செய்யப் போகிறது.

இது இந்த திட்டத்தில் பங்காளிகளாக இணைந்து கொள்ளுகின்ற நாடுகளின், குறிப்பாக வளரும் நாடுகளின் பொருளாதாரங்களில் முதலீடு செய்யப்படும் அல்லது கடனாக வழங்கப்படும்.

இந்த முதலீடு அல்லது கடன் அடுத்த 10 ஆண்டுகளில் இந்த திட்டத்துடன் இணைந்திருக்கும் நாடுகளுக்கு கிடைக்கப் போகும் பெரு வாய்ப்பாக இருக்கும்.

அதேவேளை இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ளும் பங்காளி நாடுகளுக்கு சீனாவின் மிகப் பெரிய சந்தையைத் திறந்து விடுவதற்கும் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் அறிவித்திருக்கிறார். இந்த இரண்டு அறிவிப்புகளும் இலங்கை உள்ளிட்ட பி.ஆர்.ஐ. பங்காளி நாடுகளுக்கும், சீனா தனது ஆதிக்கத்தை விரிவாக்குவதற்கு குறிவைத்திருக்கும் நாடு களுக்கும் மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமையும்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில், இலங்கைக்கு சீனா முன்னுரிமை கொடுக்கிறது. இந்தியாவுக்கு மிக அருகாக இருக்கும் இலங்கைதீவில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்குப் பெற்றிருக்கிறது. கொழும்பு துறைமுகத்தில் ஒரு கொள்கலன் முனையத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. கொழும்பு துறைமுக நகரத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறது.

ஆக, இலங்கையின் அபிவிருத்தியில் ஒரு பங்காளியாக மாத்திரம் சீனா இணைந்திருக்கவில்லை. இலங்கையைத் தனது எதிர்கால பாதுகாப்புத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய இடமாகவும் அடையாளம் கண்டிருக்கிறது சீனா.

இலங்கையை சீனா தனது பாதுகாப்பு நலன்கள், தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா, இல்லையா என்ற கேள்வி இங்கு முக்கியமில்லை. அது நடைமுறைச் சாத்தியமாகவோ, சாத்தியமற்றதாகவோ இருக்கலாம்.

அவ்வாறான எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கும் இடங்களில் ஒன்றாக இலங்கையை சீனா அடையாளப்படுத்தியிருக்கிறது என்பதே கவனிக்க வேண்டியது. அவ்வாறான இடங்களில் சீனாவின் செல்வாக்கை அதிகரிப்பது முக்கியமான தேவைப்பாடாக இருக்கிறது. அந்த இலக்கின் ஊடாகப் பார்த்தால், அடுத்த 10 ஆண்டுகளில் சீனா பி.ஆர்.ஐ. திட்டத்தில் செய்யப் போகும் 100 பில்லியன் டொலருக்கும் அதிகமான நிதியில் ஒரு குறிப்பிட்டளவு இலங்கைக்கு கிடைக்கும் சாத்தியங்கள் அதிகமாகவே உள்ளன. இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களிலோ, அல்லது உட்கட்டமைப்புத் திட்டங்களிலோ சீனா அந்த முதலீட்டைச் செய்யுமாயின், அது ரணில் விக்கிரமசிங் கவின் பயணத்துக்கு கிடைக்கின்ற மிகப் பெரிய வெற்றியாக அமையும்.

சீனாவின் நிதியமைச்சர் லியூ குன் மற்றும் சீனாவின் உதவிப் பிரதமர் டிங் சியோசியாங் உள்ளிட்டவர்களுடன் நடத்திய பேச்சுக்களின் போது, இலங்கையில் முதலீட்டை அதிகரிப்பது குறித்து பேசியிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இதன்போது, இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில், நீண்டகால, இடைக்கால கடன் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சீனத் தரப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்




அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி மற்றும் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திக்கு சீனா உதவும் என்று சீனாவின் உதவிப் பிரதமர் உறுதி அளித்திருக்கிறார்.

எவ்வாறாயினும், அடுத்த 10 ஆண்டுகளுக்கான சீனாவின் 100 பில்லியன் டொலர் திட்டம் மட்டுமே இப்போது அறிவிக்கப்பட்டுள்ளதே தவிர, அது எவ்வாறு எந்தெந்த நாடுகளுக்கு பகிரப்படும் என்ற அறிவிப்பு வெளியாகவில்லை. அது அடுத்த கட்டம். அந்தக் கட்டத்தில் தான் இலங்கை எந்தளவுக்கு நன்மை யைப் பெற முடியும் என்ற கேள்விக்குப் பதில் கிடைக்கும்.

சீனாவின் முதலீட்டை எதிர்பார்க்கும் இலங்கை கடன்களை எதிர்பார்க்கவில்லை. ஏற்கெனவே சீனாவின் கடன்களால் தான் இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியது என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.

இலங்கை அரசாங்கம் அந்தக் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ளாவிடினும், புதிய கடன்களைப் பெற்றுக் கொள்வதில் உள்ள ஆபத்தை ரணில் விக்கிரமசிங்கவினால் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. அதனால் தான் அவர் கடன்களை பெறுவதை விட முதலீடுகளை அடைவதில் அதிக ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 19



# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் சீன விஜயத்தில் அரசியல் வெளிப்படுத்தும் செய்தி

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



இலங்கையின் அரசியலை புதிய திசை நோக்கி நகர்த்துவதில் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் முனைப்பாக உள்ளனர் என்பது இப்பகுதியில் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன் இன்னோர் நகர்வை சமகாலத்திலும் காணக்கூடியதாக உள்ளது. ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையானது, உள்நாட்டுப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

அதாவது உள்நாட்டுப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான நகர்வே அந்த நாட்டின் வெளியுறவாகும். அத்தகைய வரைபுக்குள்ளேயே தற்போது ஆட்சியிலுள்ள ஜனாதிபதியின் வெளியுறவின் நடவடிக்கைகளும் நிகழ்கின்றது. இலங்கையின் வெளியுறவானது, வரலாறு முழுவதும் எதிர்நோக்கும் புனிசார் அரசியலை வெற்றிகொள்வதற்கு பூகோள சக்திகளை அரவணைப்பதன் மூலம் தீர்வுகாண முயல்கிறது. அத்தகைய மரபார்ந்த வெளியுறவின் வடிவமாகவே இலங்கை ஜனாதிபதியின் சீன விழயம் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இக்கட்டுழையும் அதற்கான காரணங்களை தேட முயல்கிறது.

இலங்கை ஜனாநிபதி நான்கு நாள் உத்தியோகபூர்வமான பயணத்தை மேற்கொண்டு சீனாவுக்குச் சென்றிருந்தார். சீனாவின் தலைநகரில் நடைபெறவுள்ள பட்டி மற்றும் பாதை முன்முயற்சிக்கான மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக விஜயம் செய்தார்.. ஏறக்குறைய 130 நாடுகளின் தலைவர்களும் 30க்கும் மேற்பட்ட உலகளாவிய அமைப்புகளும் கலந்து கொள்ளும் மகாநாட்டில் பொதுவளர்ச்சி மற்றும் விருத்தி எனும் கருப்பொருளைக் கொண்டு மகாநாடு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு இலங்கையின் ஜனாதிபதிக்கு செங்கம்பன வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளதுடன், சீன ஜனாதிபதியுடன் கடன் மறுசீரமைப்புப் பற்றி உரையாடவுள்ளமை குறிப்பிட்டத்தக்கதாகும்.

உலக நாடுகளின் தலைவர்களை சந்திப்பதுடன், இலங்கையின் பொருளாதார வாய்ப்புகளை திறந்து விடுவதன் நோக்குடன் அந்தநாடுகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி உரையாடி வருகின்றார். பல நாட்டுத் தலைவர்களுடன் சந்திப்புகளையும் உரையாடலையும் மேற்கொள்ளும் ஜனாதிபதி, இலங்கையின் பொருளாதார வாய்ப்புகளை வலுப்படுத்தும் நோக்கில் சந்திப்புகளை மேற்கொண்டு வருகின்றார்.

சீன வர்த்தகர்களுடன் முதலீடு வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பில் உரையாடும் போது எதிர்கால வர்த்தக வாய்ப்புக்கான தளமாக இலங்கையை பயன்படுத்திக் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். சீன வர்த்தகர்கள் மத்தியில் இலங்கை போட்டி நிறைந்த டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்திற்குள் படிப்படியாக முன்னேறிவரும் இலங்கை, வர்த்தக தளமாக பயன்படுத்தக்கூடிய சூழலைக் கொண்டிருக்கின்றது என்றார்.

இவ்வாறு சீனாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பொருளாதாரத்திற்கான முகாந்திரங்களை வலுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். இலங்கையை ஆசிய-பசுபிக் பிராந்தியத்தின் சிறிய நாடுகளையும் தீவு நாடுகளையும் ஒன்றிணைப்பதுடன், இந்து சமுத்திர நாடுகளுக்கிடையே வர்த்தக உறவினை பலப்படுத்த ஜனாதிபதி முயல்வதாகவே தெரிகிறது. இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற நாடுகளுடன் வர்த்தக உறவை வலுப்படுத்துவதிலும் உடன்படிக்கையை மேற்கொள்ளவும் உரையாடல்களை நிகழ்த்தி வருகின்றார்.

ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு முன்னர் ஊடகங்களுக்கு வழங்கிய கருத்து முக்கியமானதாக அமைந்துள்ளது. குறிப்பாக அக்டோபர் 13 ஆம் திகதி Voice Tube தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில், காஸா அழிந்தால் பயங்கர விளைவுகள் ஏற்படும் எனக் குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சப்பாத்துக் கால்களுக்குள் நாங்கள் இருக்க விரும்பவில்லை எனக் குறிப்பிட்டடிருந்தார். இலங்கை ஜனாதிபதி இவ்வாறே கடந்த



மாதம் ஜேர்மன் தொலைக்காட்சி சேவைக்கு அளித்த பேட்டியிலும் மேற்குவகத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளை சரமாரியாக வெளிப்படுத்தியிருந்தார். இலங்கை ஜனாதிபதி தாராளவாதியாக மட்டுமல்லாது மேற்குலக விசுவாசியாகவும் நண்பனாகவும் விளங்கியதோடு, மேற்குலக மரபுகளுக்குள்ளால் இ,யங்குபவராகவும் காணப்படுபவர். இலங்கையில் அவரது அரசியல் வரலாறு முழுவதும் சிங்கள மக்களது பாரம்பரிய ஆடையில் காண முடியாதவராகவும் பௌத்த பிக்குகளை அட்டாங்க நமஸ்காரம் செய்யாதவராகவும் விளங்கியவர்,திடீரென மேற்குக்கு எதிரானவராக காட்டிக் கொள்கிறார் என்பதே ஆச்சரியமான விடயமாக தெரிகிறது.

அதிலும் அமெரிக்க ஜனாதிபதியை நோக்கிய அவரது கருத்து அதிக சர்ச்சைக்குரியதாகவே தெரிகிறது. அவ்வாறு கூறுமளவுக்கு ரணில் விக்கிரமரிங்கவுக்கு வலு கொடுத்த நாடே அமெரிக்கா என்பதை நினைவு கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு அமெரிக்காவை விமர்சனம் செய்யும் துணிச்சல் நெருக்கமான நட்புசக்தியாலேயே முடியும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒரு எதிரி தெரிவித்திருந்தால் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரே இராஜதந்திர நெருக்கடியை உருவாக்கியிருப்பார். அல்லது அத்தகைய தலைமைக்கு எதிராக அழுத்தமான நெருக்கடிகளைக் கொடுத்திருப்பார். ஆனால் இலங்கை ஜனாதிபதிக்கு எதிரான எத்தகைய கருத்தும் ,இது வரை அமெரிக்கத் தரப்பிடமிருந்து எழவில்லை என்பது இது ஒரு கூட்டு உபாயமாகவே தெரிகிறது.

எதனைத் தெரிவித்தாவது சிங்கள மக்கள் மத்தியில் தீவிர தேசியவாதியாக ரணில் விக்கிரமசிங்க விளங்க வேண்டும் என்பதே அடிப்படையான அம்சமாகும். அத்தகைய தீவிர தேசியமே அடுத்து வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகொள்ள உதவும் என்பது உள்நாட்டுச் சக்திகளாலும் வெளிநாட்டுச் சக்திகளாலும் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அதில் ஓரங்கமே சீனாவுக்கான பயணமும் பொருளாதார மீட்பாளர் என்பதற்கான நடைமுறையுமாகும்.

உள்நாட்டில் ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தை மீட்டவராகவே முதன்மைப் படுத்தப்படுகிறார். யதார்த்தமும் அதுவாகவே அமைந்துள்ளது. ஆனால் மேற்குலகத்தின் ஒத்துழைப்பின்றி உள்நாட்டுப் பொருளாதாரத்தை சுமுக நிலைக்கு கொண்டு வந்திருக்க முடியாது என்பது புரிந்து கொள்ளக்கூடிய விடயமாகும். அத்தகைய நெருக்கடியை வெற்றிகொள்வதில் இந்தியாவுக்கும் மேற்குலகத்திற்குமே அதிக பங்கிருந்தது. அதில் சீனாவின் பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே அமைந்திருந்தது. ஆனால் சீனா தற்போது அதிக பங்களிப்பை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதுடன், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கவும் விரும்புவதாகவே தெரிகிறது. அதற்கு வலுவான காரணம் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போதே ஹம்பாந்தோட்டை 99 வருட ஒப்பந்தம் சாத்தியமானது. அது மட்டுமல்லாது ரணில் விக்கிரமவிங்களினால் மட்டுமே சீனாவின் நண்பர்களான ராஜபக். குடும்பத்தை பாதுகாக்க முடியுமென சீனா கருதுகிறது. அதுவே யதார்த்தமுமாகும். ராஜபக்ஷக்களது தற்போதைய நிலையை மிக ஆபத்தானதாகவே தெரிகிறது. அதனை தெளிவாக உணர்ந்த சீனா அவர்களை எதிர்காலத்திற்கு பாவிப்பதற்கு பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும் எனக் கருதுகிறது. அதற்கான வாய்ப்பான தலைவராக ரணில்விக்கிரமசிங்க மட்டுமே காணப்படுகிறார். அவர் மேற்கையும் கையாண்டு சீனாவையும் இந்தியாவையும் சமாளித்துக் கொள்வதில் திறமைசாலியாகக் காணப்படுகிறார் என்பதை சீனா உணர்ந்துள்ளது. அது மட்டுமல்ல ரணில் விக்கிரமசிங்க ஒரு இந்திய எதிர்ப்புவாதியாக உள்ளார் என்பதை அடிப்படையாகக் கொண்டு சீனா தனது நட்பு சக்தியாக கருதுகிறது. அதற்கு அமைவாகவே ரணில் விக்கிரமசிங்க செயல்படுகிறார். சீனாவின் ஆதரவுக்கான எண்ணத்தை வெளிப்படுத்தும் விதத்தில் மேற்குக்கு எதிரான உரையாடலை அவ்வப்போது பிரயோகித்து வருகிறார். அதற்கு அடிப்படையில் பொதுஜன பெரமுனவின் ஆதரவைப் பெறுவது மட்டுமல்லாது பௌத்த மகா சங்கத்தினரதும் பெரும்பான்மை மக்களதும் ஆதரவையும் திரட்டுவது நோக்கமாகத் தெரிகிறது.

இவை எல்லாவற்றையும் கடந்து சிங்கள பெரும்பான்மை மக்கள் இந்தியாவையோ மேற்கையோ ஆதரிப்பதை விட சீனாவையே அதிகம் ஆதரிப்பவர்களாக உள்ளனர். சீனாவே தங்களது பாதுகாப்புக்கும் எதிர்கால இருப்புக்கும் உறுதுணையாக அமையுமென்ற புரிதலை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் புவிசார் அரசியலையோ, பூகோள அரசியலையோ புரிந்து கொண்டு செயல்படுபவர்களாக இல்லை. மாறாக தமக்கு அதிக பாதகமில்லாத அதேநேரம் தம்மை ஆதரிக்கும் சக்தி எதுவெனக் கருதுகின்றனர். ஒப்பீட்டடிப்படையில் இந்தியா, அமெரிக்காவை விட சீனா இலங்கையின் நலன்களுக்கு எந்த நெருக்கடியும் கொடுக்காத சக்தியாக விளங்குகிறது என்பதனாலேயே சீனாவை அதிகம் ஏற்றுக் கொள்கின்றனர். சீனாவும் பெரும்பான்மை சிங்கள-பௌத்தம் கருதுவது போல் செயல்படுகிறது. வீட்டோ அதிகாரத்தைக் கொண்டனோ, உள்நாட்டில் மட்டு ஷமல்ல உலகளாவிய மட்டத்திலும் இலங்கை பாதுகாப்பை

(20ம் பக்கம் பார்க்க)

Friends MATRIMONY
உங்கள் திருமணத்
தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...
10,000க்கு மேற்பட்ட
வரன்கள் கையிருப்பில்!
10,000+
இலங்கைத் தமிழர்களுக்கான
உலகளாவிய திருமண இணையத்தளம்.
கனடாவில் வசிக்கும் வயது 32, (Single) Hindu, வேளாளர், Bachelor Degree, வரை படித்த மணமகளுக்கு பொருத்தமான வரனை (punguduthivil மாத்திரம்) எதிர்பார்க்கின்றோம். (FMID 119246)
கனடாவில் வசிக்கும் வயது 22 முதல் 45 வயது வரை வேளாளர், Mixed வேளாளர்,கோவியர், குருகுலம் சார்ந்த, Nalavar, Udayar, High School, Diploma, Bachelor Degree, Master Degree, PHD வரை படித்த மணமகளுக்கு (Single / Divorced) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம் . (FMID 120327)
கனடாவில் வசிக்கும் 25 வயது முதல் 65 வயது வரையான (Catholic / Christian) High School, Diploma, Bachelor Degree, Master Degree, PHD, வரை படித்த மணமகன்களுக்கு (Single / Divorced / Annulled ) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம்.

+1 647 709 1761
+1 647 709 1536
+1 416 477 2259
+1 416 477 6854
GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
friendsmatrimonym@gmail.com
Mon to Fri 11AM to 6PM
Sat 12PM to 6PM
www.friendsmatrimony.com

# பாலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் வரலாற்று துயரங்கள் குறித்து ஐ.நா. செயலாளரின் கருத்துக்கு எதிராக இஸ்ரேல் போர்க்கொடி




ஹமாஸ் ஒக்டோபர் ஏழாம் திகதி மேற்கொண்ட தாக்குதலிற்கான வரலாற்று சூழ்நிலைகளை முன்வைத்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் ஆற்றிய உரைக்கு இஸ்ரேல் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளதுடன் அவர் பதவி விலக வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையின் கூட்டமொன்றில் உரையாற்றிய அன்டனியோ குட்டரஸ் ஹமாசின் தாக்குதல் வெற்றிடமொன்றில் இடம் பெறவில்லை என தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மக்கள் 56 வருட மூச்சுதிணற வைக்கும் ஆக்கிரமிப்பிற்குட்படுத்தப்பட்டுள்ளனர் தங்கள் நிலங்கள் ஆக்கிரமிப்பாளரினால் பறிபோவதையும் வன்முறையில் சிக்குண்டுள்ளதையும் பார்த்துள்ளனர் என ஐக்கியநாடுகள் நாடுகள் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அவர்களின் பொருளாதாரம் முடக்கப்பட்டுள்ளது அவர்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் அவர்களின் வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார். அரசியல்தீர்வு குறித்த அவர்களின் நம்பிக்கைகளும் காணாமல் போகின்றன என அவர் தெரிவித்துள்ளார். எனினும் பாலஸ்தீனியர்களின் துயரங்களால் ஹமாசின் கண்டிக்கப்பட வேண்டிய தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது அதே போன்று ஹமாசின் தாக்குதல்களிற்காக பாலஸ்தீன மக்களிற்கு எதிரான கூட்டுத் தண்டனையை நியாயப்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகத்தின் கருத்திற்கு பதிலளித்துள்ள இஸ்ரேல் அவர் பதவி விலக வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது. சிறுவர்கள் பெண்கள் முதியவர்களை படுகொலை செய்வதை நியாயப்படுத்தும் விதத்தில் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் செயலாளர்நாயகம் ஐநாவிற்கு தலைமை தாங்குவதற்கு பொருத்தமற்றவர் என ஐநாவிற்கான இஸ்ரேலிய தூதுவர் கிலாட் எர்டான் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். நான் அவரை உடனடியாக பதவி விலகுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என இஸ்ரேலிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

### ஹமாசுடன் கை குலுங்கிய பெண்

ஹமாசினால் விடுதலை செய்யப்பட்ட 85 வயது பெண் தான் விடுதலையாகும் வேளை ஹமாசை சேர்ந்த ஒருவருடன் கை குலுக்குவதை காண்பிக்கும் வீடியோக்கள் படங்கள் வெளியாகியுள்ளன. ஹமாசை சேர்ந்த ஒருவருடன் கை குலுக்கும் அந்த வயோதிப் பெண்மணி சமாதானம் என தெரிவிக்கின்றார்.

யொச்செவ்ட் லிவ்சிட்ஸ் என்ற வயோதி பெண்ணையும் நுரிட் கூப்பர் என்ற 79 வயது பெண்ணையும் ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. எகிப்தின் ரவா எல்லை ஊடாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்,பின்னர் அவர்கள் அம்புலன்ஸ்களுக்குள் ஏற்றப்படுவதை எகிப்திய தொலைக்காட்சிகள் காண்பித்துள்ளன. இதேவேளை இருவரையும் விடுதலை செய்யும் வீடியோவை ஹமாஸ் வெளியிட்டுள்ளது. அதில் அதிர்ச்சியுடன் ஆனால் பதற்றமற்று காணப்படும் இரு பெண்களிற்கும் ஹமாஸ் அமைப்பை சேர்ந்தவர்கள் குளிர்பானங்களை வழங்குவதை காண முடிகின்றது. பின்னர் அவர்களை செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைப்பதாக ஹமாஸ் உறுப்பினர்கள் அழைத்து செல்வதையும் காண முடிகின்றது. அவ்வேளை அவர்களில் ஒரு பெண் ஹமாஸ் உறுப்பினருடன் கை குலுக்குகின்றார்.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் சீன விஜயத்தில் அரசியல் வெளிப்படுத்தும் செய்தி

(19ம் பக்கத் தொடர்ச்சி) உத்தரவாதப்படுத்தி வருகிறது. இந்தியா எப்போதும் ஆபத்தான சக்தி எனவும் அமெரிக்கா நலனுக்கான சக்தி என்பதையும் தென்னிலங்கை ஆட்சியாளர்களும் சிங்கள-பௌத்த மக்களும் கருதுகின்றனர். எனவே இலங்கை ஆட்சியாளர்கள் இறுதியாக சீனா பக்கமே விளங்குவார்கள் என்பது ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கையிலேயே கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரை தேர்தலில் வெற்றி பெறுவது, பொருளாதாரத்தை மீட்பது, பெரும்பான்மை சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை பாதுகாப்பது போன்ற இலக்குகளை கொண்டவராக காணப்படுகிறார். அதனை நோக்கி செயல்படுபவராகவே உள்ளார்.

அதனை அடைவதற்கு உலகத்தில் எந்த நாட்டுடனும் இணைந்து செயல்படத் தயாராக உள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு மிதவாதி அல்லது தாராளவாதி என்பதை விட தீவிர சிங்கள - பௌத்த தேசியவாதியாகவே காணப்படுகிறார். வெளிப்படையாக சிங்கள பௌத்த தீவிர தேசியவாதியாக தன்னை காட்டிக் கொள்ளாத போதும் அடிப்படையில் தீவிர தேசியவாதியாகவே இயங்குகிறார். சிங்கள-பௌத்த பெரும்பான்மைக்கு நெருக்கடி வரும் போதெல்லாம் காப்பானாக செயல்படுபவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை எந்த சிங்கள சாமானியனும் மறுக்க முடியாது.


# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START




Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Glve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation



Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# உலகப் போரின் கதாநாயகனும் வில்லனும்



இரண்டாம் உலகப்போரின் கதாநாயகனும் வில்லனும் ஒருவரே. அவர்தான் அடால்ப் ஹிட்லர். 2ஆம் உலகப் போரின் போது ஜேர்மனியின் சர்வாதிகாரியாக விளங்கினார். அவர் பெயரைக் கேட்டாலே உலகம் நடுங்கியது. 2ஆம் உலகப் போர் 5 கோடி மூள்வதற்கும் அதன் மூலம் பெருமளவினர் இறப்பதற்கு காரணமாக இருந்த ஹிட்லரின் வாழ்க்கை பல திருப்பங்களும் திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்தது.

வட ஆஸ்திரியாவில் உள்ள பிரானவ் என்ற ஊரில் பிறந்தார். தந்தையின் பெயர் அலோய்ஸ் கிரப்பர் ஹிட்லர். இவர் சுங்க இலாகா அதிகாரியாக வேலை பார்த்து வந்தார். இவருக்கு மூன்று மனைவிகள். இதில் மூன்றாவது மனைவியான க்ளாராவின் நான்காவது மகன் ஹிட்லர்.

பிறந்தது முதலே ஹிட்லர் நோஞ்சானாக இருந்தார். அடிக்கடி காய்ச்சல் வரும். ஒரு வருடத்துக்குப் பிறகு தான் உடம்பு தேறியது.அலோய்ஸ் கண்டிப்பான தந்தை தந்தை சுங்க அதிகாரியாக பணியாற்றியதால் அடிக்கடி வெளி ஊர் சென்று விடுவார். பள்ளியில் படிக்கும்போது ஹிட்லர் தான் வகுப்பில் முதல் மாணவர். ஹிட்லருக்கு அம்மாவிடம் செல்லம் அதிகம். அலோய்ஸ் ஹிட்லரையும் அரச பணியில் சேர்க்க விருப்பப்பட்டார். ஆனால், ஹிட்லரின் விருப்பமோ தான் ஓர் ஓவியராக வேண்டும் என்பதாகவே இருந்தது.

ஹிட்லருக்கு படிப்பில் ஆர்வம் குறைந்தது. மாணவப் பருவத்திலேயே நிறைய நாவல்கள் படித்தார். போர்கள் பற்றிய கதைகள் என்றால் நாட்டம் அதிகம்.

1903ஆம் ஆண்டு ஹிட்லரின் தந்தை இறந்துபோனார். தந்தையின் கண்டிப்பு இல்லாமல் வளர்ந்த ஹிட்லர் நாளுக்கு நாள் முரடனாக மாறினார். மாணவர்களுடன் சண்டை போடுவதுடன் ஆசிரியர்களுடனும் மோதுவார். தனது 17 வயதில் பள்ளித் தேர்வில் தேறினார். இவரது வாழ்க்கை அரசாங்க உதவிப்பணத்தில் ஓடியது.

18 வயதானவுடன் அம்மாவிடம் பணம் பெற்றுக் கொண்டு ஓவியராகப் போகிறேன் என்று சொல்லி ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவுக்கு ரயிலேறி விட்டார். ஆனால் இவர் ஓவியப்பள்ளி தேர்வில் தோல்வியடைந்து விட்டார். எனினும், அடுத்த முறை அனுமதித் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. அந்த ஆண்டின் இறுதியில் ஹிட்லரின் தாயாரும் இறந்து போனார்.

ஹிட்லரின் பணம் கரைந்து போனதனால் பிழைக்க வழி தேடி ஜேர்மனிக்கு வந்தார். ஓவியராக வர முடியவில்லை. இராணுவத்திலாவது சேரலாம் என்று எண்ணி ஜேர்மனி இராணுவத்தில் சேர்ந்தார். அப்போது இவருக்கு வயது 25. முதலாம் உலகப் போர் தொடங்கிய காலமது.

1914இல் தொடங்கி 1918 வரை நடந்த முதலாம் உலகப் போரின் போது ஜேர்மனி இராணுவத்தில் சேர்ந்தார். இராணுவத்தில் சோல்ஜராக இருந்தார். அங்கே அவருக்கு ரன்னர் பதவி தரப்பட்டது. போரின்போது எதிரிகளால் மஸ்டர்ட் வாயு'' வீசப்பட்டதனால் ஹிட்லரின் ஒரு கண் தற்காலிகமாக பாதிக்கப்பட்டது. நுரையீரலும் பாதிப்புக்கும் உள்ளாகி, ஹிட்லர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஜேர்மனி, முதலாம் உலகப் போரில் சரணடைந்தது. மருத்துவமனையில் இருந்த ஹிட்லர் கதறியழுதார். ஜேர்மனியின் தோல்விக்கு கம்யூ னிஸ்ட்களும் யூதர்களும் காரணம் என அவர்கள் மீது வெறுப்பை வெளிப்படுத்தினார்.

பின்னர், இவர் புதிதாக தொடங்கப்பட்ட தேசிய சோசியலிஸ்ட் ஜேர்மன் தொழிலாளர் கட்சி'யில் உறுப்பினராக சேர்ந்தார். 1920 பெப்பரவரி 29ஆம் திகதி அந்த கட்சியின் முதல் பொதுக் கூட்டம் நிகழ்ந்தது. அதில் ஹிட்லர் தனது முதல் உரையை தொடங்கினார். சுவஸ்திகா சின்னத்தை கட்சியின் சின்னமாக பயன்படுத்தினார்.

1923இல் அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சி செய்ததாக ஹிட்லர் கருதப்பட்டார். அதனால் ஹிட்லரையும் அவரது சகாக்களையும் சிறையில் அடைத்தது, ஜேர்மனி அரசு.

ஹிட்லருக்கு முதல் 5 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் ஓர் ஆண்டாக குறைக்கப்பட்டது. இவர் சிறையில் இருந்தவாறே எனது போராட்டம்' (Main Kamp) என்ற நூலை எழுதினார்.

1928இல் நடந்த தேர்தலில் ஹிட்லரின் கட்சி தோல்வி அடைந்தது. இவர் ஜனாதிபதித் தேர்தலில் ஹிண்டன் பேர்க் எனும் மூத்த தலைவருக்கு எதிராக போட்டியிட்டு தோற்றார். ஹிண்டன் பேர்க் கட்சியினருக்கு ஆட்சியமைக்க ஹிட்லரின் நாஜி கட்சியின் ஆதரவு தேவைப்பட்டது. எனவே ஹிட்லருக்கு சான்சலர்' பதவி கிடைத்தது. ஆனால், ஹிட்லரின் மீது இருந்த பயத்தின் காரணமாக அதிகாரங்கள் குறைக்கப்பட்டே கொடுக்கப்பட்டது. அதே சமயம் பாராளுமன்றக் கட்டடம் கொளுத்தப்பட்டது. ஜனாதிபதி ஹிண்டன்பேர்க் மக்களின் போராட்டத்துக்கு அடிபணிந்தார்.

1933 ஜனவரி 30ஆம் திகதி ஹிட்லரை அழைத்து பிரதமராக நியமித்தார். இவர் பதவியேற்ற ஒரு வருடத்தில் ஹிண்டர் பேர்க் உயிரிழந்தார். இதனால் ஜனாதிபதி பதவியையும் கைப்பற்றி எதிர்ப்பாளர்களை ஒழித்து விட்டு ஜேர்மனியின் சர்வாதிகாரியானார் ஹிட்லர். இராணுவ இலாகாவையும் இராணுவப் பதவியையும் தானே எடுத்துக் கொண்டார். அரசியல் கட்சிகளை தடை செய்தார். பாராளுமன்றத்தை கலைத்தார். எதிரிகளை சிறையில் தள்ளினார்.

யூதர்களை கைது செய்து சிறையில் பட்டினி போட்டும் விஷப்புகை செலுத்தியும் கொன்றார். தினமும் ஆறாயிரம் முதல் பத்தாயிரம் பேர் விஷப்புகையினால் கொல்லப்பட்டனர்.

ஜேர்மனியின் தரைப் படை, கடற்படை, விமானப்படை மூன்றும் உலகின் சிறந்த படைகளாக உருவெடுத்தன.

1939ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1ஆம் திகதி எதுவித போர்ப் பிரகடனமும் தெரிவிக்காமல் போலந்து நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டை கைப்பற்றிக் கொண்டார். அப்போது ஹிட்லருடன் நட்பு கொண்டார், இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி.

ஜப்பான் உட்பட வேறு சில நாடுகளும் ஜேர்மனியுடன் கைகோர்த்துக்கொண்டன. ஹிட்லரை கொலை செய்ய அவருடைய தளபதிகளே சதித்திட்டம் தீட்டினர். இவர்களுக்கு தலைவன் கர்னல் வான்ஸ்டப்பன் பர்க் ஆவான்.

1940ஜீலை 20ஆம் திகதி நடந்த கொலை முயற்சியில் மயிரிழையில் உயிர் தப்பினார், ஹிட்லர். கொலை முயற்சியாளர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஹிட்லர் பதவியேற்றபோது 1933இல் ஜேர்மனியில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை 60 இலட்சம். ஆனால், 1936இல் வேலையில்லாதவர் என்று ஒருவர் கூட இல்லை. படுவேகமாக கார்கள் போவதற்கும் மிக நீண்ட அதிவேக பாதை உலகில் முதல் முறை கட்டப்பட்டது, ஜேர்மனியில் ஹிட்லர் ஆட்சிக் காலத்திலே தான். முதியவர்களுக்கு ஓய்வுதியம், இலவச வைத்தியம், காப்புறுதி திட்டங்கள், சாமான்யர்களுக்கான கார் முதலிய வசதிகள் கொண்டு வரப்பட்டது, இவரது காலத்தில் தான்.

தொழிற்சாலைகளால் ஏற்படக்கூடிய மாசினை தடுக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டார். மருத்துவத் துறையிலும் ஜேர்மனியை வியக்கத்தக்க வகையில் முன்னேற்றினார்.

பெண்களுக்கு இராணுவத்தில் பல பணிகளை ஒதுக்கி இடமளித்து பெண்ணுரிமை காப்பதில் தலைசிறந்து விளங்கினார். மிருக வதை தடுப்புச்சட்டத்தை அமுல் படுத்தினார். குழந்தைகளிடம் அன்பு காட்டி அவர்களுக்கு பிடித்த மனிதராக திகழ்ந்தார். ஹிட்லரின் காலத்தில் ஜேர்மனிய இராணுவம் தொழில்நுட்பத்திலும் விஞ்ஞானத்திலும் மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்தது.

ஹிட்லர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது ஜேர்மனியின் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம் தான். அப்போது சிறந்த ஆயுதங்கள் கூட இல்லை. ஆனால் ஹிட்லர் ஆட்சியேற்ற 4 ஆண்டுகளில் ஐரோப்பாவில் மிகப்பெரிய பிரம்மாண்டமான இராணுவமாக மாறியது ஜேர்மனிய இராணுவம்.

நவீன போர் விமானங்கள், துப்பாக்கிகள், டாங்கிகள் போன்றவற்றை கொண்டமைத்து அசுர சக்தியாக ஜேர்மனிய இராணுவம் மாறிய வேகம் உலக வரலாற்றிலே பெரிய ஆச்சரியம் என்று உலகப்பெரும் இராணுவ ஆராய்ச்சியாளர்கள் இன்றும் வியந்து கூறுகின்றார்கள்.

ஜேர்மனியின் தலைநகரான பெர்லினில் சுரங்கம் அமைத்து தங்கியிருந்தார், ஹிட்லர். 1945 ஜனவரி 16ஆம் திகதி முதல் ஹிட்லர் அங்கு வசிக்கலானார்.

1804இல் மாவீரன் நெப்போலியன் பயன்படுத்திய நாற்காலி ஒன்று இவரிடம் இருந்தது. 1945 ஏப்ரல் பின்பகுதியில் பேர்லின் நகரம் மீது ரஷ்ய விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. ஹிட்லர் தங்கியிருந்த இடத்துக்கு அருகிலும் குண்டுகள் விழுந்தன. ஈவாபிரவுன் என்ற பெண் 1930 ஆம் ஆண்டு முதல் ஹிட்லரின் மனம் கவர்ந்த காதலியாக இருந்து வந்தாள்.

முசோலினி சிறைவைக்கப்பட்ட நேரத்தில் ஹிட்லர் தன் ஆத்ம நண்பரான முசோலினியை மீட்க ரகசியப்படையை அனுப்பி முசோலினியையும் அவரது குடும்பத்தினரையும் மீட்டார்.

1945 ஏப்ரல் 30ஆம் திகதி இரவு 9 மணியளவில் முசோலினியும் அவர் மனைவியும் எதிர்ப்பாளர்களால் சுட்டுக 'கொல்லப்பட்டனர் என சுவீடன் நாட்டு வானொலி சேவை அறிவித்த செய்தியை ஹிட்லர் கேட்டு மிகுந்த வேதனையடைந்தார். அன்றிரவு 12 மணியளவில் பெர்லின் நகரம் முழுவதும் ரஷ்யப்படைகள் வசமாகி விட்டது என ஹிட்லருக்கு தகவல் கிடைத்தது.

1945ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் திகதி பெர்லின் நகரை ரஷ்யப் படைகள் சூழ்ந்து கொண்டன. எப்பொழுதும் எதிரிகளிடம் கைதிகளாக பிடிபடலாம் என்ற நிலை உருவாகியது. இதனால் எதிரிகளிடம் சிக்குவதை விட தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற முடிவை ஈவாபிரவுனிடம் தெரிவித்தார்.

அந்த ஆண்டு ஏப்ரல் 27ஆம் திகதி ஹிட்லரின் பிறந்த நாளை முன்னிட்டு பாதாள அறையில் விருந்து நடந்தது. மறுநாள் ஏப்ரல் 28ஆம் திகதி ஹிட்லர், ஈவாபிரவுன் திருமணம் நடைபெற்றது. காலை 11 மணிக்கு ஹிட்லர் தனது உயிலை எழுதினார்.

அந்த உயிலில் தன் சொத்துக்கள் யாவும் நாட்டுக்குச் சேரவேண்டும் என குறிப்பிட்டார். பிறகு தன் அந்தரங்க உதவியாளரை அழைத்து, 'நானும் ஈவாவும் ஒன்றாக இறந்து விடப் போகின்றோம். நாங்கள் இறந்த பின்னர், எங்கள் உடல்களை ஒரு போர்வையில் சுருட்டி பெற்றோலால் எரித்து சாம்பலாக்கி விடுங்கள். எங்கள் அறையில் உள்ள கடிதங்கள், டைரிகள், என் உடைகள், என் பேனாக்கள், கண்ணாடி முதலிய பொருட்களை சேகரித்து ஒன்றுவிடாமல் எரித்து விடுங்கள் என்று கூறி (22ம் பக்கம் பார்க்க)

Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 22



# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே! எதிலும் தெளிவான சிந்தனை இருக்கும். மனதில் இருந்த வீண்கவலைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்கள் மூலம் நன்மை உண்டாகும். வியாபாரத்திற்கு தேவையான நிதி உதவியும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு தற்காலிக பதவி உயர்வு, கூடுதல் பொறுப்புகள் கிடைக்கப் பெறலாம்.

ரிஷபராசி அன்பர்களே! எதிர்பார்த்த நல்ல செயல்கள் நடக்கும். கடன் பிரச்னைகள் தொல்லை தராமல் இருக்கும். உங்களது செயல்களுக்கு இருந்த எதிர்ப்புகள் நீங்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்பார்த்த பணவரத்து இருந்தாலும் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். போட்டிகள் தொல்லை தராமல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பணிசுமை குறைந்து காணப்படுவர்.

மிதுனராசி அன்பர்களே! சாமர்த்தியமாக பேசி காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நன்மையாக இருக்கும். பூர்வீக சொத்து க்களில் இருந்த தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். பார்ட்னர்கள் ஒத்துழைப்புடன் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வீர்கள். ஏற்றுமதி சம்பந்தமான துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

கடகராசி அன்பர்களே! சுபகாரியங்களில் கலந்து கொள்வீர்கள். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். தேவையற்ற கவலைகள் நீங்கும். உங்களை பற்றி விமர்சனம் செய்து வந்தவர்கள் அதனை விட்டு விடுவர். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளை செய்து முடிப்பர். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

சிம்மராசி அன்பர்களே! துணிச்சலாக எதையும் செய்து முடிப்பீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும். அரசாங்கம் மூலம் லாபம் உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி விறுவிறுப்படையும். கடன் பாக்கிகள் வசூலாகும். தொழில் தொடர்பான பிரச்னைகள் தீரும். உத்தியோகத்தில் பணிக் கஷ்டங்கள் குறையும்.

கன்னிராசி அன்பர்களே! நினைத்த காரியம் நிறைவேறும். எதையும் மனோ தைரியத்துடன் செய்து முடிப்பீர்கள். வீடு தொடர்பான பணிகள் விரைந்து நடக்கும். நெருக்கடியான நேரத்தில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் லாபம் உண்டாகும். எதிர் பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் பற்றி ஆலோசிப்பர்.குடும்பத்தில் இருந்த இறுக்கமான சூழ்நிலை மாறி மகிழ்ச்சியான நிலை வரும்.

துலாம் ராசி அன்பர்களே! எதிலும் அவசரப்படாமல் நிதானமாக முடிவு எடுப்பது நன்மை தரும். மனதில் இருந்த கவலைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் செலவும் அதிகரிக்கும். புதிய ஆர்டர்கள் பெறுவதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டி இருக்கும். உத்யோகத்தில் தயக்கத்துடன் தங்களது பணிகளை செய்ய வேண்டி இருக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும்.

விருச்சிகராசி அன்பர்களே! கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் கடும் முயற்சிக்குப் பின் வெற்றி கிடைக்கும். வீடு, வாகனம் போன்றவற்றை புதுப்பீர்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும். புதிய ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் திறமையாக பணிகளை செய்து பாராட்டு பெறுவர். பதவி உயர்வும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும்.



தனுசராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் வெற்றிகரமாக நடக்கும். வீண்கவலை நீங்கும். ஆன்மிக எண்ணங்கள் அதிகரிக்கும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரம் விருத்தியடையும். ஏற்கனவே வரவேண்டி இருந்து வராமல் நின்ற ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் வேலை பளு, வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் குறையும். புதிய வீடு வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

மகரராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலைகள் நீங்கி நிம்மதி உண்டாகும். வர வேண்டிய பணம் வந்து சேரும். சாமர்த்தியமான பேச்சினால் காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். அடிக்கடி கனவுகள் வரக்கூடும். தொழில் வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து மனநிறைவு அடைவர். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும்.

கும்பராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தந்தை மூலம் செலவு உண்டாகலாம். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கும் முயற்சிகளில் சாதகமான நிலை காணப்படும் குடும்பத்தில் பிரச்சனை தலைதூக்கி பின்னர் சரியாகும்.

மீனராசி அன்பர்களே! மனம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும். உடல் ஆரோக்கியத்தை தரும். வீண் கவலை நீங்கும். தடைபட்ட காரியங்களில் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலை காணப்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இருந்த தடைகள் விலகும். போட்டிகள் குறையும், குடும்பத்தில் இருப்பவர்களுடன் இணக்கமான போக்கு காணப்படும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

## கனடாவுக்கு அமெரிக்கா, பிரிட்டன் ஆதரவு!

(7ம் பக்கத் தொடர்ச்சி) இருக்க வேண்டும் என்றும் இந்தியா கோரியது. ஆயினும், ஒட்டாவாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளைப் பட்டியலிட்டுள்ள உலகளாவிய விவகார இணையதளம், இந்த எண்ணிக்கை சம அளவிலேயே இருப்பதாகத் தெரிவித்துள்ளது. கனடா தூதரக அதிகாரிகளுக்கான ராஜாங்க சட்ட விலக்குகளை நீக்குவதாக இந்தியா கூறுவது சர்வதேச சட்டத்தை மீறுவதாகும்' என்று ஒட்டாவாவில் செய்தியாளர் சந்திப்பின் போது ஜோலி கூறினார். இருப்பினும் இதற்காக கனடா பதிலடி கொடுக்காது என்றும் அவர் கூறினார்.

'ராஜாங்க சட்ட விலக்கு விதிமுறைகளை மீற நாம் அனுமதித்தால், உலகத்தில் எங்கும் எந்தத் தூதரக அதிகாரியும் பாதுகாப்பாக இருக்க மாட்டார்கள்' என்று ஜோலி கூறினார். கனடாவைச் சுற்றிப் பார்க்க அல்லது குடியேற விரும்பும் இந்தியர்களை கனடா இன்னும் வரவேற்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நன்றி -பிபிசி

## எதிர்ப்பு அரசியலின் இலக்கு?

(7ம் பக்கத் தொடர்ச்சி) இப்போது சுயாதீன நீதித்துறை கோரி எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கும் தமிழ்த் தேசிய கட்சிகள் முப்பதைந்து வருடங்களாக அரசமைப்பில் உள்ளவற்றை அமுல்படுத்தாதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு நிகழ்வைக் கூட முன்னெடுத்ததில்லை. இலங்கையின் நீதித்துறை சரியாக இயங்கவில்லையென்று வாதிட முற்படுவோர் நாட்டின் அரசியல் சாசனத்துக்கு எதிராக அரசாங்கம் செயல்படுவதை ஒரு தவறாக இதுவரையில் வாதிட்டதில்லை. இது தமிழ் தேசிய எதிர்ப்பு அரசியலின் பலவீனமான பக்கம். இதனை சரிசெய்வது தொடர்பில் தமிழ் கட்சிகள் சிந்திக்க வேண்டும்.

## உலகப் போரின் கதாநாயகனும்...

(21ம் பக்கத் தொடர்ச்சி) தன் மனைவியுடன் தன் அறைக்குச் சென்றார். அறைக் கதவு மூடப்பட்டது. வெகு நேரமாகியும் கதவு திறக்கப்படவில்லை. நீண்ட நேரம் கழித்து காத்திருந்த மந்திரிகளும் தளபதிகளும் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றனர்.

ஒரு சோபாவில் உட்கார்ந்த நிலையில் ஹிட்லரின் உயிரற்ற உடல், அவர் காலடியில் ஒரு துப்பாக்கி கிடந்தது. அதன் நுனியில் இருந்து புகை வந்து கொண்டிருந்ததால் அவர் சற்று நேரத்துக்கு முன்பே தன்னை சுட்டு தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும் என்று அனுமானிக்க முடிந்தது. ஹிட்லரின் வலது கரம் அவரது தாயாரின் படத்தை அணைத்தபடி இருந்தது. ஹிட்லர் உடல் இருந்த சோபாவில் சாய்ந்த பிணமாக இருந்தாள் ஈவா.

ஹிட்லரின் உடலையும் ஈவாவின் உடலையும் ஒரு கம்பளப் போர்வையில் சுற்றினார்கள். பிறகு அந்த உடல்களை அறையில் இருந்து தலைமைச் செயலகத் தோட்டத்துக்கு தூக்கிக் கொண்டு போனார்கள். அங்கே பெற்றோலையும் எரிவாயுவையும் கொண்டு இரு உடல்களையும் எரித்து சாம்பலாக்கினார்கள். சில மணிநேரம் கழித்து வந்த ரஷ்யப் படையினர் ஹிட்லரை காணாமல் திகைத்துப் போனார்கள்.

அந்த சம்பவத்துக்கு பிறகு ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டமை, ஹிட்லரினதும் அவரது மனைவியினதும் உடல்கள் எரிக்கப்பட்டமை தொடர்பான செய்திகள் பரவின. எனினும், அப்போது ஹிட்லர் இறக்கவில்லை. தலைமறைவாக இருக்கிறார் என்று நம்பியவர்களும் ஏராளம்!

## இலங்கை தொடர்பில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ள முக்கிய விடயம்?

(8ம் பக்கத் தொடர்ச்சி) அதேபோன்று தற்போது நாடு முகங் கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு முற்றுமுழுதாக பொருளாதாரக்காரணிகள் மாத்திரமன்றி, நாட்டின் ஆட்சியியல் கட்டமைப்பில் ஏற்பட்ட தோல்வி பெருமளவுக்குப் பங்களிப்புச் செய்திருக்கின்றது.

அதன்படி குற்றங்கள் தொடர்பில் செயற்திறன் மிக்க வகையிலும், பக்கச்சார்பின்றியும், நம்பகத்தன்மை வாய்ந்த முறையிலும் தண்டனை வழங்குவதற்கான இயலுமையின்மை இலங்கையின் ஆட்சியியல் கட்டமைப்பில் நிலவும் பிரதான குறைபாடாகக் காணப்படுகின்றது. எனவே இவ்விடயம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆட்சியியல் தொடர்பான ஆய்வறிக்கையில உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மிகக் கவனமாக ஆராயப்பட்டு, உடனடியாக அமுல் படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து வேறுபட்ட தனித்தவொரு கட்டமைப்பாக அரச சட்டவாதி அலுவலகத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்பது நாட்டின் முக்கிய அரசியல் கோரிக்கையாக மாறவேண்டும் என்று அவ்வறிக்கையில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.


## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா
## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

இணுவில் திருவுர் ஒன்றியம்- கனடா விடுக்கும் அறிவித்தல்
பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

நிர்வாக ஆண்டு (2023--2025)

காலம்:-28-10-2023 (சனிக்கிழமை)

நேரம்:- 4.00 மாலை முதல் 6.00 மாலை வரை

இடம்:- ரொறன்ரோ நகரசபை மண்டபம்

Scarborough Civic centre) Room 1 &2 - 150 Borough Dr- Scarborough


ஊர் அபிமானிகள் மற்றும் ஒன்றிய அங்கத்தவர்கள் அனை வரையும் இப்பொதுக் கூட்டத்திற்கு வருகை தந்து நல்லாலோ சனைகளிற் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு சாந்தி சர்வானந்தா 647-200-2177
மு.கிருபாகரன் 416-430-0422 ப.கஜஜெயன் 416-732-5898

Eelanadu 27 Oct 2023.qxp_Layout 1 2023-10-25 4:10 PM Page 23




# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),**
**Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
Life Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
Super Visa Insurance
RESP, RRSP and TFSA
Arun
KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS
KABIS & ASSOCIATES INC.


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit
தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com


முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 12வது ஆண்டாக நடாத்தும்
ஊட்டும் கரங்கள்
வெள்ளி விழா கண்ட
அரவிந்தனின் மெகா ரியூனேர்ஸ்
இசையில்
Mega Tuners
பிரபல பின்னணிப் பாடகி
சுர்முகி
பிரபல பின்னணிப் பாடகர்
முகேஷ்
கனேடிய
தமிழ்ப்பாடகர்கள்
இணைந்து
வழங்கும்
இன்னிசை மாலை
OCTOBER
28
2023
SAT @ 6:00PM
ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE
TORONTO
(VICTORIAL PARK & CONSUMER ROAD)
சிறப்பு உணவு: ரொறன்ரோவின் முன்னணி உணவகமான நந்தா கேற்றறிங் வழங்கும் சிறப்பு உணவு அனைத்து பார்வையாளர்களுக்கும் வழங்கப்படும்
அன்பளிப்பு
$200.00 • $100.00 • $50.00
விழா குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்
தொடர்புகளுக்கு:
ஈழநாடு பரமேஸ் - 416.841.9600
தயவு செய்து நுழைவுச்சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும்.
நிகழ்வுகள் சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.
தங்கள் ஆதரவுக்கு நன்றிகள்


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.